Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
(C/423)
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 23 ஞாயிற்றுக்கிழமை (06.02.2011) பக்கங்கள் 12 ஓசை - 129

## பிரபாகரனின் தாயார் கவலைக்கிடமான நிலையில்

### தொடரும் தீவிர சிகிச்சை



(யாழ்ப்பாணம்)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை பார்வதி அம்மாளின் நிலைமை கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக செய்திகள் வந்தவண்ணமுள்ளன. தற்போதைய நிலையில் அவரது ஆரோக்கியம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது உடல்நிலையும் மோசமடைந்துள்ளது. பேசும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் பாரிய தீ விபத்து; தமிழ்ப் பெண்கள் இருவர் பலி

(லண்டன்)

தென்கிழக்கு லண்டனில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தீவிபத்தில் முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

தென்கிழக்கு லண்டனில் அமைந்துள்ள 16அடுக்குள்ள தொடர்மாடி வீடொன்றில் ஏற்பட்ட தீவிபத்திலேயே இவர்கள் உயிரிழந்துள்ளதாக லண்டன் மாநகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளையைச் சேர்ந்த தர்மலிங்கம் சந்திராவதி மற்றும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அழகரத்தினம் ரஞ்சிதாதேவி ஆகியோரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

இத் தீவிபத்தில் நான்கு பேர் காயமடைந்தனர். அவசர முதலுதவிகளின் பின்னர் படுகாயமடைந்த மற்றுமொரு வன்னிப் பிரதேசப் பெண் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளிடமிருந்து மக்களைப் பிரிப்பது எப்படி?
# இறுதிக்கட்ட யுத்தத்தில் இந்தியாவின் வியூகம்!

## பிரிட்டிஷ் அரசின் உதவியும் கோரப்பட்டது



(லண்டன்)

**இறுதி யுத்தத்தின்போது புலிகளின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்களை அவர்களிடமிருந்து பிரித்தெடுப்பது எப்படி என்பது குறித்து இந்திய அரசு பிரித்தானியாவுடன் இணைந்து வியூகம் வகுத்திருந்தது. இதற்காக இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் புதுடில்லியில் சந்தித்து மிக முக்கிய மந்திராலோசனைகளில் ஈடுபட்டிருந்தனர்.**

மேற்படி இரகசிய மந்திராலோசனை குறித்த தகவல்களை தற்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கிறது.

இறுதிக்கட்ட யுத்தம் உச்ச நிலையை எட்டிய சமயம் இரு நாடுகளினதும் அமைச்சர்கள் (11 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயரும் படைமுகாம்கள்

(திருமலை)

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் பல படைமுகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் இலங்கைப் படையினர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் சிற்றாறு படைமுகாமும், அனுராதபுர மாவட்டத்தில் ஹொரவப்பொத்தானை படைமுகாமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிக்கல மற்றும் வாகரைப் பிரதேசங்களில் அமைந்திருந்த படைமுகாம்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் இம் முகாம்களில் இருந்த இலங்கைப் படையினர் அவசரமாக வெளியேற்றப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை எவரும் தடுத்து நிறுத்த முடியாது

### கர்ச்சிக்கிறார் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

பொது மக்களிடம் காணப்படும் ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்புத் தெரிவித்தல் போன்ற ஜனநாயக உரிமைகளை யாராலும் தடுத்து நிறுத்த முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன் தினம் ஏற்பாடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்களுக்கு நுழைவுச்சீட்டு; அவுஸ்திரேலியாவில் புதிய நடைமுறை

### உயிரியலளவுகள் – தகவல் திரட்டு அமுல்



(சிட்னி)

இலங்கையர்களுக்கு விசா வழங்கும் முன்னெடுப்புகளின்போது உயிரியலளவுகள் தகவல் தொழிநுட்பத்தைக் கையாள அவுஸ்திரேலியா தீர்மானித்து உள்ளது.

உயிரியலளவுகள் தொழிநுட்பம் என்பது மனிதர்களின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உடல் அல்லது நடத்தை ரீதியான உள்ளார்ந்த தனிப்பட்ட அம்சங்களை தனித்துவமான முறையில் அடையாளம் காண்கின்ற முறைஆகும்.

ஏராளமான உலக (11 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகளை மீறினால் நீதிகேட்போம் இலங்கை அரசு அதற்கு விதிவிலக்கு அல்ல

### ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் அறிவிப்பு



(லண்டன்)

இலங்கை அரசுடன் மிக நீண்ட முரண்பாடுகளுக்குப்பின்னர் கடுமையான வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் இலங்கை அரசைப் பணியவைத்தே நாம் நிபுணர்குழுவை அமைக்க முடிந்தது எனினும், எமது நிபுணர் குழு இன்னமும் தமது பணியை நிறைவு செய்யவில்லை என்றும் எவராவது நீதிக்குப் புறம்பாக குற்றம் புரிந்திருந்தால் அல்லது மனித உரிமைகளை மீறியிருந்தால் அவர்கள் நிச்சயம் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பதே உலக நீதியின் அடிப்படை. இதற்கு இலங்கை விவகாரம் விதிவிலக்கானது அல்ல என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீமூன் தெரிவித்துள்ளார்.

லண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பான்கீமூன் கடந்தவாரம் உரையாற்றினார். இவரது உரையின் இறுதியில் இவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப்பதிலளிக்கும் போதே ஐ.நா. செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் சூடான் போன்று பிரிந்து செல்லும் உரிமைக்காக ஈழத்தமிழ் மக்களின் மத்தியிலும் ஐக்கிய நாடுகள் சபை வாக்கெடுப்பு நடத்துமா என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் Act Now அமைப்பின் சார்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பான் கீ மூன் (11 ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகரில் புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கப்படுகிறது

(யாழ்.நிருபர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகின்றது. ஒவ்வொரு மாதமும் நான்காவது திங்கட்கிழமைகளில் புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி ந.ஜெயக்குமார் புற்றுநோயாளர்களைப் பார்வையிட்டு வருகிறார்.

மாதாந்தம் புதிதாக இனங்காணப்படும் புற்றுநோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கும் மற்றும் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (10)


# புதிய நிர்வாகத் தெரிவு

(கரவெட்டி)

கரவெட்டி பனை தென்னை வள பணிப்பாளர் நலன்புரிச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு நேற்று முன்தினம் 04 ஆம் திகதி நலன்புரிச் சங்கத்தின் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்த நிர்வாகத் தெரிவில், சி.தர்மலிங்கம் தலைவராகவும், ந.தவராஜா உப தலைவராகவும், எஸ்.சாந்தினி செயலாளராகவும், வி.விஜயராசா உபசெயலாளராகவும், எஸ்.கீதா பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (18)

# புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் விவசாயிகளுக்கு நீர்இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

கமநெகும திட்டத்தின் கீழ் புன்னாலைக்கட்டுவன் வடக்கு மற்றும் குப்பிளான் வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 24 விவசாயிகளுக்கு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களால் நீர் இறைக்கும் இயந்திரங்களும் அதற்குரிய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் விவசாய உபகரணங்கள் நேற்று உடுவில் பிரதேச செயலகத்தில் வைத்து விவசாயிகளிடம் கையளித்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் கூறுகையில்,

மக்கள் தமக்கு கிடைக்கின்ற வாழ்வாதார உதவிகளைத் திட்டமிட்டுச் சரியான முறையில் பயன்படுத்தி, அதன் உச்சப் பயன்பாட்டைப் பெற வேண்டும் என்றும், அதன் மூலம் உங்களது குடும்பத்தினதும், பிரதேசத்தினதும் பொருளாதார மேம்பாட்டிற்கு பங்காற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் மஞ்சுளாதேவி, பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், கிராம அலுவலர்கள், ஈ.பி.டி.பி.யின் வலிகாம் பிரதேச இணைப்பாளர் ஜீவன் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் வெள்ளப் பாதிப்பு; உலர் உணவு வழங்க ஏற்பாடு

(வவுனியா)

வவுனியாவில் பெய்து வரும் அடைமழை காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு வார காலத்துக்குத் தேவையான உலர் உணவு வகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக இதுவரை வவுனியாவில் 16 ஆயிரத்து 32 குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரத்து 147 பேர் வரை இடம்பெற்றுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது தொடர்பான கூட்டமொன்று நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இதில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிசாத் பதியூதின், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்ஸ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வாரத்திற்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களை ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் ஊடாக வழங்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (மி,39)

# எழிலைக் கெடுக்கும் குப்பைத் தொட்டி

யாழ்.நகரத்தை அழகுபடுத்தும் இடமாக ஒரு காலத்தில் யாழ்.முற்றவெளிப் பகுதி இருந்தது. தற்பொழுது மீன் சந்தைக்கு தெற்காக தொலைத்தொடர்பு நிலையக் கோபுரத்திற்கு கிழக்காக ஒரு பெரிய குப்பைத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரத்தின் அழகை இது கெடுப்பதுடன், துர்நாற்றம் வீசி சுகாதாரக் கேடு விளைவித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பொலித்தீன் பைகள் அந்தப் பகுதி முழுவதும் பறந்து நகர்ப்புறத்தை அலங்கோலப்படுத்துகின்றது.

போதாக்குறைக்கு கொட்டடிப் பகுதியில் இருந்து வரும் கால்நடைகள் தமது பங்களிப்பையும் செய்து வருகின்றன. மீன்சந்தை, மரக்கறி மற்றும் பனங்கிழங்கு, பழவகைச் சந்தை காணப்படும் பகுதியைச் சுத்தம் பேண சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பது அவசியம் என பொதுமக்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. (23)

# நெடுந்தீவுப் போக்குவரத்து சீர்கெட்டுப் போனது ஏன்?

(யாழ்.நிருபர்)

குறிகட்டுவான்-நெடுந்தீவுப் போக்குவரத்தில் அரச படகுகள் எவையும் ஈடுபடுத்தப்படாமையால் திறந்த படகுகளில் மழை, வெய்யில் என்பவற்றால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

சிலவேளைகளில், இப்படகுகள் பழுதடைந்து விடுவதால் மக்கள் தமது பயணத்தைத் தொடரமுடியாமல் திரும்ப வேண்டியுள்ளது.

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக புதிய படகொன்று கட்டப்பட்ட நிலையில், கொழும்பில் இருந்து எடுத்து வருவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த சில மாதங்களின் முன புனரமைப்பு வேலைகளுக்காக ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட குமுதினிப் படகு திருத்த வேலைகளின் நிமித்தம் தாமதமடைவதால், சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குமுதினிப் படகுத் திருத்தவேலைகளை விரைவுபடுத்தியோ அல்லது புதிய படகைத் தருவித்துச் சேவையில் ஈடுபடுத்தியோ நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களால் கோரிக்கை விடப்படுகிறது. (10)

## ஓய்வூதியர் சங்கம் நாளை திறப்பு

(கொழும்புத்துறை)

யாழ்.மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்கம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள யாழ். பிரதேச காரியாலயத்தில் பிரதேச முகாமையாளர் பத்மநாதன் அவர்களால் திறந்து வைக்கப் படவுள்ளது.

இச்சங்கத்தின் ஊடாக, ஓய்வூதியர்கள் ஓய்வூதியத்தைப் பெற முடியும் எனவும் அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். (52)

# வடமாகாண கல்வி அபிவிருத்திக்கு 310 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் கல்வி அபிவிருத்திக்காக இந்த வருடம் 310 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன் வெளியிட்டுள்ளார். இந்த நிதியொதுக்கீட்டினை மாகாண கல்வி அமைச்சு மேற் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிதியின் மூலம் 335 பாடசாலைகளுக்கு 2500 கணினிகளும் 10 ஆயிரம் மாணவர்களுக்கும் 1000 ஆசிரியர்களுக்கு உரிய தளபாடங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் அங்கப்பா முருகானந்தம்**

**(நாதஸ்வர வித்துவான்)**

கடந்த 22.01.2011 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்திகேட்டு உடன் வந்து உதவி புரிந்தோருக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலமாகவும், நேரடியாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

(C/433)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# வெள்ளப் பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ள மக்களின் சுகாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு

## சுகாதார அமைச்சு கூடி ஆராய்வு



(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் காப்பது தொடர்பிலும், மக்களை பாதுகாப்பது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரின் தலைமையில் நேற்று இந்த விசேட கலந்துரையாடல் அமைச்சகத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிலைமைகள் தொடர்பில் ஆராயுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன விடுத்த பணிப்புரையின் பேரிலேயே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவை, அநுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, மாத்தளை, கண்டி, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் காரணமாக பாதிப்புகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

இதன்படி, சுகாதார அமைச்சின் அவசர அனர்த்த முகாமைத்துவ நடமாடும் சேவையானது 24 மணிநேரம் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அத்துடன், வைத்தியசாலையில் ஏற்படும் நிலைமைகளை இந்த நடமாடும் சேவைக்கு அறிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இடம்பெயர் முகாம்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் அதிக போசனைகள் கொண்ட பிஸ்கட்களும் வழங்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான சுத்தமான குடிநீர் வழங்கல் மற்றும் உணவுப் பொருட்களும், பொதுமக்களுக்கு சுகாதார அதிகாரிகளால் விநியோகிக்கப்படவுள்ளன.

அத்துடன், கொழும்பு தேசிய வைத்தியாசலை, களுபோவில, மற்றும் றாமக ஆதார வைத்தியசாலைகளின் விசேட வைத்திய குழுக்கள், தேவைக்கு ஏற்ப குறித்த பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

மனிதகுலத்தை விட உயர்ந்தது எதுவும் இல்லை. எவனும் தன்னை இழிவாக எண்ணுதல் கூடாது. தன்னை இழிவாக எண்ணுபவன் எப்பொழுதும் வெற்றி அடைய மாட்டான் -மகாபாரதம்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பேச வேண்டியவர்களுடன் பேசுங்கள்

யாழ். குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலையையும், மக்களின் மனநிலையையும் பல்வேறு அமைப்புகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு படம் பிடித்துக் காட்டுவதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றார்கள்.

குடாநாட்டு மக்கள் மீது அவர்கள் காட்டிவரும் அக்கறையை வெறும் கண்துடைப்பு என்று எவரும் தட்டிக்கழித்துவிட முடியாது.

யுத்தம் முடிவடைந்து யுத்தத்தின் வடுக்களையும் வலிகளையும் தாங்கிக்கொண்டு படிப்படியாக அமைதிச்சூழலுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் குடாநாட்டு மக்களை, அச்ச உணர்வில் ஆழ்த்தும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவது என்பது உண்மையே!

இந்த அச்ச உணர்வை யாரால் நீக்கமுடியும் என்பதே இன்று எம்முன் எழும் கேள்வியாகும். இதற்கு நாம் வெளிநாடுகளின் உதவியை நாட வேண்டுமா? அப்படித்தான் நாடினாலும் அவர்களால் எம்மக்களின் அச்ச உணர்வைக் களைய முடியுமா?

எங்கள் நாட்டுப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட தரப்பினர் தமக்குள் தாமே பேசித் தீர்த்துக் கொள்வதுதான் ஆரோக்கியமான ஒரேயொரு வழி என்பதை உணரவேண்டும்.

இதற்கு வன்னியில் நடந்த இறுதியுத்த முடிவானது நல்லதொரு உதாரணமாக இருந்ததை மறந்து வெளிநாடுகளிடம் உதவிக்கரம் நீட்டுவதேன்?

'பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுபவர்கள்' எமக்கு நியாயத்தையோ, அமைதியையோ பெற்றுத்தருவார்களா என்பது கேள்விக் குறியாகவே இருக்கும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உண்டு என்பதை எவரும் மறுதலித்துக்கூற முடியாது. அதற்காக அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு வெளிநாடுகளை நாம் நாடவேண்டுமா?

மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு 'காவடி எடுத்து' உரத்த குரலில் கோரிக்கைகள் விடுகிறார்கள்.

அரசுடனோ, ஜனாதிபதியுடனோ கலந்து பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குரிய ஆற்றல் இல்லையா என இப்போது மக்கள் கேள்வி எழுப்பமுற்பட்டுள்ளனர்.

அலரிமாளிகையும், ஜனாதிபதி மாளிகையும் தமிழ்த் தலைவர்களுக்காக எப்போதும் திறந்திருக்கும். ஒன்றுபட்டு வாருங்கள் உங்களதும் மக்களதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்று தேசியப் பொங்கல் விழாவில் ஜனாதிபதி தமிழ் தலைவர்களுக்கு விடுத்த அழைப்பையும் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

இந்நிலையில் 'வெள்ளிக்கிழமை' என்னும் அமைப்பு குடாநாட்டு நிலைமைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மகஜரும் அனுப்பிவைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாருடைய பிரச்சினையை யாருடன் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற யதார்த்தத்தை இந்த அமைப்பினர் விளங்கிக்கொண்டுள்ளமையை தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

முன்னர் விட்ட தவறுகளை மீண்டும் மீண்டும் செய்யாமல் என்ன பிரச்சினையானாலும் அதனை அரசுடன் பேசித் தீர்த்துக்கொள்வதே சிறந்த அணுகுமுறையாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

-ஆசிரியர்-

# மண்டைதீவு கிழக்குப் பகுதிகளுக்கும் நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(மண்டைதீவு)

மண்டைதீவிற்கு பௌசர் மூலம் நீர் வழங்கும் நடவடிக்கை நீண்டகால இடைவெளிக்குப்பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை வரவேற்கும் பொதுமக்கள் இந்தச் சேவையை வேலணைப் பிரதேச சபை குடியிருப்புப் பகுதிக்கு அப்பாலும் விஸ்தரிக்க வேண்டு மெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்டைதீவு கிழக்குப் பகுதியில் முதலாம், இரண்டாம் வட்டாரப்பகுதிகளுக்கு இந்த "பௌசர்" தலைகாட்டுவது இல்லை என அந்தப்பகுதி மக்கள் குறைதெரிவிக்கின்றனர். மேலும் குறித்த ஒரு இடத்தில் வைத்து தண்ணீர் வியாபாரத்தை முடித்துவிட்டு பிள்ளையார் கோவில் பக்கமும் இந்த வண்டி "தண்ணிகாட்டுவதாக" கூறப்படுகிறது.

மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கு நீண்டகாலமாக கடற்படையினரின் பௌசர் வண்டியே இலவசமாக தாங்கியில் நீர் நிறைத்துச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். (23)

## கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய இலங்கை மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

சோமாலியா கடற்கொள்ளையர்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்த மூன்று இலங்கை மீனவர்கள் கடந்த புதன்கிழமை இரவு விடுவிக்கப்பட்டதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தாம் கடற்கொள்ளையர்களால் விடுவிக்கப்பட்டதாக, இந்த மீனவர்கள் வானொலித் தொடர்பு மூலம் வியாழன் இரவு அறிவித்தனர்.

கடந்த மாதம் மிரிஸ பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களும் சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது சோமாலிய கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டனர்.

இவர்களில் இருவர் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி கடற் கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அவர் கூறினார். இந்த மீனவர்களை இலங்கைக்கு அழைத்து வர 15 நாட்களுக்கு மேல் தேவைப்படும் என ஜயவீர மேலும் குறிப்பிட்டார்.

## அனுமதி பெற்ற பின்னரே கட்டடம் அமைக்க அனுமதி

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட ஆனையிறவு தொடக்கம் முகமாலை வரையான ஏ9 வீதியின் இருமருங்கிலும் புதிதாகக் கட்டடங்கள் கட்ட விரும்புவோர் வீதியின் மத்தியில் இருந்து இரு பக்கமும் 24 அடி இடைவெளிவிட்டு கட்டடங்களை அமைக்க வேண்டுமெனவும், புதிதாகக் கட்டடங்கள் கட்ட விரும்புவோர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் உரிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டட வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (70)

# மாணவிகளுடன் சேஷ்டை பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவிகளுடன் சேஷ்டை புரிந்து காதல்கடிதங்களை இரகசியமாகக் கொடுக்கும் இளைஞர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதென்று பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மாணவர்களின் பெற்றோர்கள் பொலிஸ்மா அதிபருக்கு புகார்கள் செய்திருந்தார்கள்.

இளைஞர்களின் இச்செயற்பாடு காரணமாக மாணவிகள் கல்வியினைத் தொடர முடியாதநிலை ஏற்படுவதுடன் இளவயது திருமணத்திற்கும் வழிவகுக்கின்றது.

இனிமேல் இளவயதுக் காதலர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்து அவர்க்ள் பொது இடங்களில் நெருக்கமாகப் பழகுவதைக் கண்டால் இருவரையும் கைது செய்வது என பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இந்த நடைமுறை கடந்த காலங்களில் கடைப் பிடிக்கப்பட்ட போதிலும் இவ் விடயத்தில் பொலிஸார் அந்தளவிற்கு கவனம் செலுத்தாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித்தேர்தல் வன்முறை இதுவரை பெரிதாக இல்லையாம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நிறை வடைந்த நிலையில் எவ்வித பாரிய வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லையென தேர்தலைக் கண்காணிக்கும் கபே அமைப்பு தெரிவித்தது. இது தொடர்பாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் றோகணஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்-

உள்ளூராட்சித் தேர்தல் வன்முறையென இதுவரை 18 சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன.

எனினும் இந்தச் சம்பவங்களில் பெரும்பாலனவை கொழும்பு, களுத்துறை, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இரத்தினபுரி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரண்டு சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## லயன்ஸ் கழகத்தின் இன்றைய கூட்டங்கள்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மாதாந்த பொதுக கூட்டமும் பணிப்பாளர் சபைக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெல்லியடி செவிப்புலனற்றோர் அலுவலகத்தில் வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் கே.பி.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பெப்ரவரி மார்ச் மாதங்களில் கழகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பான ஆய்வும் மற்றும் 2011,2012 ஆண்டுக்கான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்வுக் குழுவை நியமித்தல் போன்ற விடயங்கள் குறித்து கலந் தாலோசிக்கப்படவுள்ளது.

எனவே கழகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு லயன்ஸ் கழகச் செயலாளர் ந.துரைராசா அறிவித்துள்ளார். (100)


## 20 மாடுகள் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக செட்டிகுளம் பகுதியில் 20 மாடுகள் வரை உயிரிழந்துள்ளதாக செட்டிகுளம் பிரதேச செயலர் கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

இம் மாடுகளைப் புதைக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பிரதேசசபையினர் மாடுகளைப் புதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (மி, 39)

# இரவு நேரங்களில் ஒளிராத மின்விளக்குகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்து கோயில் வீதிப் பகுதி இரவு நேரங்களில் இருளில் மூழ்கியிருப்பதாகவும், இதனால் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கோயில் வீதியில் உள்ள மின்கம்பங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதும் அவை ஒளிதரக்கூடிய சக்தியை இழந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வீதியில் உள்ள தேவாலயத்திற்கு இரவு நேரங்களில் பெருமளவு மக்கள் வழிபாட்டுக்குச் செல்லும்போது பயப்பீதியுடனேயே சென்று வருவதாகவும் தெரிவித்த அப்பகுதி மக்கள், தற்போது இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களுக்கு இக்கும்மிருட்டு சாதகமாக அமைந்துவிடும் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# பொலிகண்டி ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தின் சித்திரத் தேரின் வெள்ளோட்டம் இன்று

(சாவகச்சேரி)

பொலிகண்டி அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆசியுரைகளை சிவஸ்ரீ வ.சிவராஜாசர்மா, பிரம்மஸ்ரீ தானுவாசுதேவக் குருக்கள், பிரம்மஸ்ரீ அ.பிரேமச்சந்திரக் குருக்கள், பிரம்மஸ்ரீ பொ.ஸ்ரீதரக்குருக்கள், பிரம்மஸ்ரீ அ.ரவீந்திரக் குருக்கள் ஆகியோரும், வாழ்த்துரைகளை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோரும் வழங்கிச் சிறப்பிப்பர். சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நேர்முக வர்ணனையை மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன் தொகுத்து வழங்கு வார்.

தொடர்ந்து சித்திரத் தேரினை வடிவமைத்துக் கொடுத்த உடுப்பிட்டியூர் இந்திர கலாலயத்தினைச் சேர்ந்த சிற்பக் கலாநிதி நா.மகேந்திரம், நீர்வேலியூர் இராசா கெங்காதரன் ஆகியோருக்குப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (60)

# குடாநாட்டில் ஆரம்பமாகிறது குடிசன மதிப்பீட்டுப் பணிகள்

(யாழ்ப்பாணம்).

இலங்கையில் 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குடிசனமதிப்பீட்டுப் பணிகளுக்கான முன்செயற்பாட்டு நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த முப்பது ஆண்டுகளின் பின்னர் வடக்கு, கிழக்கில் தேசிய மட்டத்திலான குடிசன மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த மாதம் குடிசன மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடவுள்ள மாவட்ட ரீதியிலான கடமையை மேற்கொள்ளவுள்ள புள்ளி விபரவியலாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கொழும்பு புள்ளி விபரத் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ளது. வெகு விரைவில் பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக உள்ள கிராம அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதற்கான செயற்பாடுகள் உரிய மாவட்ட புள்ளிவிபர அலுவலா களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிராம அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நிறைவடைந்ததும் கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்படும் பயிற்சித் தொண்டர்களுக்கான வகுப்புக்களும் இடம்பெறவுள்ளன.

# காரைநகர்-பலுகாடு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகர்-பலுகாடு இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் கடந்த முப்பது வருடங்களின் பின்னர் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

1991ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் இவ்வாலயச் சூழல் கடற்படையினரின் பாதுகாப்பு வலயமாக இருந்து வந்துள்ளது.

யுத்த நடவடிக்கைகளின் போது ஓரளவு சேதமடைந்த இவ்வாலயத்தில் கடற்படையினர் பூசை வழிபாடுகள் செய்து வந்ததாகவும், இவ்வாலயத்தில் அம்பாள் அவர்களுக்குப் பல அற்புதக்காட்சிகளைத் தெரியப்படுத்தியதாகவும் அவர்கள் பக்தியுடன் பூசை வழிபாடுகளைச் செய்து வந்ததாகவும் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்நது வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் முதல் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இவ்வாலய வீதி புனரமைக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (10)


# 39 பேருக்கு நலனோம்பு உதவிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிக் கைத்தொழில் வணிகமன்றத்தின் 32 ஆவது பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சாவகச்சேரி வர்த்தக உரிமையாளர்களினால் 39 பேருக்கு நலனோம்பு உதவிகள் வழங்கப்படவுள்ளதுடன், வெள்ளிவிழாக் கண்ட அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேசசெயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஐக்சீல் மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ, பொலிஸ் உயர்அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (11)



கலாநிதி வேல்முருகு தங்கராசாவிற்கு தேசமானி, தேசமானிய கலாநிதி, கலாநிதி ஆகிய மூன்று விருதுகளை எட்டு பீடங்களைச் சேர்ந்த அகில இலங்கை பௌத்த சம்மேளனம் கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி வழங்கிக் கௌரவித்தது.

# இத்தாவில் முருகன் ஆலய வழிபாட்டுக்கு அனுமதி

(பளை)

கடந்தகால போர் நடவடிக்கைகள் காரணமாக 5 வருடங்களுக்கு மேலாகப் பூசை வழிபாடுகள், பராமரிப்புகள் எதுவுமின்றி இருந்த பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் மிகவும் பிரசித்திபெற்ற இத்தாவில் முருகன் கோயிலில் பூசை வழிபாடுகள் செய்து பக்தர்கள் வழிபடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதற்கு முன்னேற்பாடாக பக்தர்கள், இராணுவத்தினர் இணைந்து கோயிலையும் அதன் சுற்றுப்புறங்களையும் துப்புரவு செய்ததுடன் கோயில முழுமையாக பாலஸ்தானம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை பகல் நடைபெறும் விசேட அபிஷேகப் பூசை வழிபாடுகளில் இப்பிரதேச மக்கள் பெரும் தொகையாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வாலயம் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (70)

# அல்வாய் கலையகத்தில் நூல் வெளியீட்டு விழா

(தும்பளை)

'ஜீவநதி' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.பரணீதரனின் இரு நூல்களின் வெளியீட்டு விழா அல்வாய் கலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.15 மணியளவில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பரணிதரனுடைய 'மீண்டும் துளிர்ப்போம் எனும் சிறுகதைத் தொகுதியும், 'இலக்கியமும் எதிர்காலமும்' எனும் கட்டுரைத் தொகுதியும் வெளியிடப்படவுள்ளன.

வரவேற்புரையினை 'ஜீவநதி' சஞ்சிகையின் துணை ஆசிரியர் வெ.துஷ்யந்தனும், நூலுக்கான அறிமுக உரையினை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான பா.தனபாலன், கே.ஆர். கே.கமலநாதனும் நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா ஆற்றுவார். முதன்மைப் பிரதிகளை வை. வேலாயுதம், நெல்லியடி கொமர்ஷல வங்கி உதவி முகாமையாளர் எம்.மணிவண்ணன், நெல்லியடி கலைவாணி கண்ணாடிக் களஞ்சிய உரிமையாளர் ஏ.பாலகிருஷ்ணன் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

நூல் மதிப்பீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக சமூகவியற் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என். விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையினை நூலாசிரியர் க.பரணிதரன் ஆற்றுவார். (62)

# மெய்வன்மைப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் மேற்படி போட்டி நிகழ்விவுக்கு வடக்குமாகாண கல்வி, பணபாட்டு அலுவல்கள் விளையாட்டுதுறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் முதன்மை அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். (11)

# சின்னஞ்சிறு செய்திகள்

## செயலாளர் நியமனம்

சாவகச்சேரி பிரதேச சபையின் புதிய செயலாளராக செல்வி தியாகராசா தர்சினி கடந்த மாதம் தொடக்கம் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த 10 வருடங்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய இவர், பதவி உயர்வு பெற்று சாவகச்சேரி பிரதேசசபை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (70)

## கடற்றொழிலாளர் கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மணற்காடு தொடக்கம் ஆழியவளை வரை கடற்கரையோரங்களில் கரைவலைத் தொழிலில் ஈடுபடும் சம்மாட்டி மார்களுக்கான கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பகல் 11 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

அனைத்து சம்மாட்டிமார்களையும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாச அங்கத்துவ சங்கங்களின தலைவர், செயலாளர் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு சமாசச் செயலாளர் நா.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.(70)

## கட்டடம் திறந்துவைப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நிதியில் இருந்து ஐந்து இலட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட தர்மக்கேணி பூதவராயர் சனசமூக நிலையக் கட்டடத்தைக் கடந்த 31 ஆம் திகதியன்று பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தர்மக்கேணி அ.த.க பாடசாலை அதிபர், தர்மக்கேணி கிராம அலுவலர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (70)

## புதுவருட நிர்வாகிகள்

(கரவெட்டி)

கரவெட்டி மத்தி தச்சை ஐங்கரன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கீழ்க்காண்போர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாலா விஜயகுமாரன் தலைவராகவும், த.பாலச்சந்திரன் உபதலைவராகவும், இ.குகதாசன் செயலாளராகவும், ச.மனோகரன் உபசெயலாளராகவும், ம.பாலசுப்பிரமணியம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (70)

# முரசுமோட்டை, ஊரியான் பகுதிகளில் வெள்ளத்தில் மூழ்கிய நெற்பயிர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக மழை பெய்ததை அடுத்து இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக, கிளிநொச்சி முரசுமோட்டை ஊரியான் பகுதிகளில் பல்லாயிரம் ஏக்கர் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன், இந்தப் பகுதியிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றதாக அங்கிருந்து கிடைககும் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்படி பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு நெற்பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதைநெல், உரம் மற்றும் உதவிகள் அரச அரசசார் பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்தபோதும், தற்போதைய காலநிலை மாற்றத்தினால் அறுவடை பாதிக்கப்பட்டிருப்பது பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்தது போலாகியுள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான காலநிலைச் சீர்கேட்டினால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# காரைநகர் ஊரி கடற்பகுதியில் இறால் வளர்ப்புத் திட்டம் ஆரம்பம்



(காரைநகா)

காரைநகர் ஊரி கடற் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இறால் வளர்ப்பு நிலைகளில் இறால் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இறால் வளர்ப்புக்கென புத்தளம் பகுதியிலிருந்து 75 ஆயிரம் இறால் குஞ்சுகள் எடுத்துவரப்பட்டு இந்த நிலைகளில் இடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் காரைநகர்ப் பிரதேச அமைப்பாளர் ரஜனி மற்றும் கிராம அபிவிருத்தித் தலைவர் சின்னத்தம்பி சபாரத்தினம் ஆகியோர் இந்த இறால் குஞ்சுகளை நிலைகளில் சேர்த்துள்ளனர்.

இந்த இறால் குஞ்சுகளை வளர்ப்பதற்கான மாஸ் சங்கத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் சங்கத்தலைவர், அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

இந்த இறால் வளர்ப்பு நிலைகளைக் கூட்டுவதன்மூலம் இறால் வளர்ப்பை இரட்டிப்பாக்க முடியும். அத்துடன் பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்க முடியும்.

எனவே, தற்போது பயன்படுத்தப்படும் டீசல் நீர் இறைக்கும் இயந்திரத்திற்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுத் தந்தால் இன்னும் கூடிய இலாபத்தைத் தம்மால் ஈட்டிக்கொள்ள முடியும் என அதில் கேட்கப்பட்டுள்ளது. (50)

# மரக்கறிகளின் விலைகள் வவுனியாவிலும் உயர்ந்தன

(வவுனியா)

வவுனியா சந்தையில் சகல மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றது. பச்சை மிளகாய் கிலோ 800 ரூபா, கத்தரிக்காய், வெண்டிக்காய், பயறறங்காய், தக்காளி போன்ற மரக்களிகள் கிலோ 300 ரூபாவுக்கு மேல் விலை அதிகரித்துள்ளது.

தொடர்ச்சியான மழை காரணமாக மரக்கறிச் செய்கைக்கான 200 ஏக்கர், வவுனியா மாவடடத்தில் அழிவடந்துள்ளதாக மாவட்ட விவசாய விரிவாக்கல் உதவிப் பணிப்பாளர் திருமதி ஜெ.ஜெகநாதன் தெரிவித்தார்.

சுமார் 4500 ஏக்கர் நெல் வேளாண்மை, 3000 ஏக்கருக்கு மேல் உழுந்து, பயறு, கௌபி, மிளகாய் தலா 100 ஏக்கர் முற்றாகவே அழிவடைந்துள்ளது. சோளமும், பப்பாசிச் செய்கையும் அழிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அறுவடை நேரத்தில் மழை பெய்கின்றமையால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விளைந்த நெல் வேளாண்மைகள் நீரில் மிதக்கின்றது. உழுந்து, பயறு போன்ற தானிய வகைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வெள்ளத்தால் நஷ டம் ஏற்பட்டுள்ள நிலையில் அவர்களுக்குத் தொடர்ச்சியாகச் சில மாதங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விவசாயப் பணிப்பாளர், ஊடக அமைச்சுக்குத் தெரியப் படுத்தியுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

நெடுங்கேணியில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்திலும் இந்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

# திருட்டுச் சம்பவங்களை தடுக்க திடீர்ச் சோதனை நடவடிக்கை

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இராணுவத்தினர் வாகனங்கள் மீது திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருட்டுச் சம்பவங்கள் மற்றும் ஆள்கடத்தல் சம்பவங்களைத் தடுத்துநிறுத்தும் வகையில் திடீர் திடீரென வீதிச் சோதனையில் ஈடுபட்டுவரும் படையினர் சோதனை நடவடிக்கைகளின் போது வாகனச் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திர அட்டையின் இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வாகன இலக்கம் போன்றவற்றையும் பதிவு செய்து வருகின்றனர்.

பகல் வேளையினை விட இரவுவேளைகளில் இவ் வீதியில் செல்லும் வாகனங்கள் வல்லைச் சந்தி மற்றும் புத்தூர் சந்தி போன்ற இடங்களில் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (03)

# கியூடெக்கின் வீட்டுத்திட்டம்

(கொழும்புத்துறை)

வன்னியில் இருந்து மீண்டும் தமது சொந்த இடத்திற்கு வந்துள்ள யாழ்.கொழும்புத்துறை வறன்புரத்து மக்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் 20 வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு யாழ் பிரதேச செயலகத்தினூடாகவே இந்த வீடுகளை நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் கொழும்புத்துறையில் நடைபெற்றது. கரித்தாஸ் கியு,டெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை றெக்னோ அடிகள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், ஜே/62 கிராமசேவையாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். (52)

# சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பரீட்சையில் சித்தியடைந்தோர்

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் நடத்திய சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், சைவ சித்தாந்த பாலபண்டிதர் மற்றும் சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சைப் பெறு பேறுகள் வெளிவந்துள்ளன.

மேற்படி பரீட்சைகளில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளதாக தேர்வுச் செயலர் இரா. செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

★ சைவசித்தாந்த பிரவேச பண்டிதா

திருமதி ஈஸ்வரானந்தம் இந்திராணி (தெல்லிப்பழை).

★ சைவசித்தாந்த பால பணடிதர்

செல்வி. ரஜிதா கைலாயநாதன் தெல்லிப்பளை, செல்வி. பிராப்தனா இராஜசூரியர் - சுன்னாகம், திருமதி.சிவஞானம் சரோஜினிதேவி - திருகோணமலை, திருமதி. ஞானசூரியம் சிவானந்தஜோதி - மட்டக்களப்பு.

இவர்கள் அனைவரும் 3 ஆம் பிரிவில் சித்தி பெற்றுள்ளனர்.

★ சைவசித்தாந்த பண்டிதர்

சின்னராசா ரமணராசா - அளவெட்டி (2 ஆம் பிரிவு), சின்னத்தம்பி விசுவாசம் - நீர்வேலி (3 ஆம் பிரிவு), திருமதி. சந்தோஷம் ஜெயலட்சுமி - கொழும்பு (3 ஆம் பிரிவு).

மேற்படி சித்தி பெற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் பட்டமளிப்பு நிகழ்வு விரைவில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10)

# செப்பனிடப்பட்டு வருகிறது மண்டைதீவு மூன்று சந்தி

(அரியாலை)

மண்டைதீவு மூன்று சந்தியல் இருந்து வேலணை அராலிச் சந்திவரையான வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதியால் போக்குவரத்துச்ஒ செய்யமுடியாது குன்றும் குழியுமாகக் காணப்பட்டதை அடுத்து இந்த வீதி தற்போது சல்லிக்கல், தார் போன்றன இட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த சந்தியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் வீதியே தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் அல்லைப்பிட்டிக்கு மேற்காக நீச்சல் தடாகப் பகுதிக்கு அப்பால் மேற்குத் திசை நோக்கிச் செல்லும் வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வீதியில் காணப்படும் கிடங்குகள் குழிகள் என்பன உருளை இயந்திரத்தின் உதவியுடன் சமப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு செப்பனிடப்படும் வீதியால் பயணம் செய்வது சிரமமாகக் காணப்படுவதாக மககளும் வாகனச் சாரதிகளும் தெரிவிக்கின்றனர். (23)

## இன்றைய பலன்

06.02.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
விகிர்தி தை 23
இராகுகாலம் 5.06– 6.35, சுபநேரம் 9.35 –11.05, திருதியை பி.ப.1.50, பூரட்டாதி மு.இ.10.11, சித்தாமிர்தம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

–ஆதினி–

**மேடம்:**– விதண்டாவாதம், பயண அலைச்சல், பொருள் இழப்பு.

**ரிஷபம்:**– நண்பரால் உதவி, செய்தியால் நன்மை, குடும்ப மகிழ்ச்சி.

**மிதுனம் :**– ஆரோக்கிய விருத்தி, தலயாத்திரை, மன மகிழ்ச்சி.

**கடகம்:**– மதிக்கப்படல், பெரியோர் ஆசி, தொழிற்பயணம்.

**சிம்மம்:**– மகிழ்ச்சிப்பெருக்கு, இனபந்துக்கள் சேர்க்கை, பணச் செலவு.

**கன்னி :**– உதவிகள் செய்தல், தேக ஆரோக்கியம், பிள்ளைகளால் உதவி.

**துலாம் :**– துணிவான போக்கு, புதிய முயற்சி, ஆரோக்கியச் சிறப்பு.

**விருச்சிகம்:**– மகிழ்வான செய்தி, இனசன வருகை, விருந்துணவு.

**தனுசு:**– பொறாமைப்படல், ஆசைகளால் தொல்லை, மதிப்புக் குறைவு.

**மகரம்:**– உறவினர் பகை, தவறான எண்ணம், மனக் குழப்பம்.

**கும்பம் :**– பொருள் வரவு, புதிய முயற்சி, தொழிலால் இலாபம்.

**மீனம்:**– பொருள் வரவு, நண்பர் உதவி, நற்செய்தி வரல்.

# வடக்கு,கிழக்கிலுள்ள ஆயுதக்குழுக்களின்
# ஆயுதங்களைக் களையுமாறு அறிவிப்பு



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இயங்கி வரும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கி வரும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட அனைத்து முகவர் குழுவிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவ்வாறு அமுல் படுத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் அனைத்து முகவர் குழு எதிர்வரும் வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச சமூகத்திற்கு தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளது. எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த குழுவாக இருந்தாலும் சரி ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் பலர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள இடைக்கால பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு அதன் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். ஆணைக்குழு முன்வைத்த இடைக்கால பரிந்துரைகளை செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்கும் கூட்டங்களின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூட்டங்கள் வெளிவிகார அமைச்சில் இடம்பெற்றன.

நீண்டகாலம் இலங்கையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக துயரங்களை அனுபவித்துள்ள மக்களின் துயரங்களைப போக்கி, இலங்கை வாழ் மக்களிடையே நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்தார். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் நியமிக்கப் பட்டுள்ள குழுவின் முன்னேற்ற அறிக்கையை மிக விரைவில் வெளியிட எண்ணியுள்ளதாகவும் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்களின் நெருக்கடி புதுடில்லியில் இருதரப்புப் பேச்சு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து, இலங்கை மற்றும் இந்தியா இடையில் எதிர்வரும் 15 ஆம் திகதி டில்லியில் இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடைபெறவுள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இந்தியா செல்லவுள்ளது. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது மற்றும் கொல்லப்படுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து இருத்தரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, இந்திய வெளிவிவகார செயலாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் கடல் எல்லையை மீறும் இந்திய மீனவர்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது. அதே வேளை 1974ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கச்சதீவு தொடர்பான உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என தமிழகத்தின் ஆளும் தி.மு கட்சியின் கோரிக்கையை இந்திய மத்திய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

# தேசியப் பிரச்சினைகள் தொடர்பாக அரசின்நிலை தெளிவாக வேண்டும்

## அமைச்சர் வாசுதேவநாணயக்கார

(கொழும்பு)

தேசிய பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்ட மூலம் உள்ளிட்ட நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டால் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை காத்திரமாக முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களுக்கு அரசாங்கத்தின் உறுதியான கொள்கைகள் மிகவும் முக்கியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதேசத்தில் எந்தச் சமூகம் பெரும்பான்மையாக வாழ்கின்றதோ அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு தேர்தல் கடமைகளில் கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



இவ்வாறான நிலைமை காணப்பட்டிருந்தால் விருப்பு வாக்கு இலக்கம் வெளியிடுதல் போன்ற பிரச்சினைகள் எழுந்திருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் அனைவரும் இரண்டாம் மொழியைக் கற்பதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஏனையவர்கள் மொழியைக் கற்குமாறு கோருவதற்கு முன்னர் நாம் இரண்டு மொழிகளைத் தெரிந்திருப்பது அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சன்சீ கப்பலில் சென்றவர்களில் 70பேர் புலிகளின் உறுப்பினர்களாம்

(கொழும்பு)

எம்.வி.சன் சீ கப்பலில் கனடாவை வந்தடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் எழுபது பேர் வரையானோர் புலிகளின் உறுப்பினர்கள் என கனேடிய உளவுத்துறை தெரிவித்தது.

அதன் பிரகாரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஈழநாதம் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவர், விடுதலைப் புலிகளுக்கு தற்காப்புக்கலை பயிற்றுவித்தவர் மற்றும் விடுதலைப் புலிகளின் தயாரிப்பான திரைப்படமொன்றில் நடித்தவர், புலிகள் அமைப்பிற்கு உழவு இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்த ஒருவர், விடுதலைப் புலிகளின் உணவகமொன்றில் சிப்பந்தியாகப் பணியாற்றிய ஒரு இளைஞர் என சன் சீ கப்பல் அகதிகள் மத்தியில் இருந்த எழுபது பேரை விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாக கனேடிய உளவுத்துறை பட்டியலிட்டுள்ளது.

அவ்வாறானவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கக் கூடாது என்றும் கனேடிய உளவுத்துறை அந்நாட்டின் நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளது.

ஆயினும் கனேடிய உளவுத்துறை அகதிகள் மத்தியில் கண்ணில் மையை விட்டுக் கொண்டு விடுதலைப் புலி உறுப்பினர்களைத் தேடிவருவதாக குற்றம் சாட்டும் அகதிகளுக்கான சட்டத்தரணிகள், அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதாகவும் வாதிடுகின்றனர்.

அவ்வாறான நிலையில் விடுதலைப் புலி உறுப்பினராக உளவுத்துறையால் குற்றம் சாட்டப்பட்ட ஈழநாதம் ஊடகவியலாளர்,சட்டத்தரணிகளினால் வலுவான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டதன் காரணமாகவும்,திறமையான வாதம் காரணமாகவும் விடுதலைப் புலி உறுப்பினர் அல்லர் என கனேடிய நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்நாட்டில் தீர்வை முன்வைக்க இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம்

(சென்னை)



இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் உள்நாட்டுத் தீர்வுத்திட்டமொன்றை முன்வைப்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமானதென இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்த பின்னர் எமது நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியா, காத்திரமான ஒத்தழைப்பை வழங்கிவருகின்றது.

வரலாற்றுக்காலம் முதல் இந்தியா வழங்கிவரும் ஒத்தழைப்பை இலங்கைமக்கள் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் புலி உறுப்பினர்கள் நாளை விடுதலையாகின்றனர்

(கொழும்பு)




படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்றுவரும் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களில் 250 பேர் நாளை திங்கட்கிழமை விடுவிக்கப் படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தெரிவித்தார்.

சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருபவர்களில் 250 பேரே எதிர்வரும் ஏழாம் திகதி விடுவிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புனர்வாழ்வுப் பயிற்சிகள் நிறைவடைந்த நிலையில் 500 முன்னாள் புலிகளின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் வவனியாவில் விடுவிக்கப்பட்டனர் எனவும், 4619 முன்னாள் புலி உறுப்பினர்களே உள்ளனர் எனவும் அவர்களும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் விடுவிக்கப்படுவர் எனவும் இதன் பின்னர் முன்னாள் புலிகளென எவரும் இருக்கமாட்டார்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்கு புறப்பட்டுள்ள 2 வர்த்தகர்கள்



(கொழும்பு)

இளைய தலைமுறையினருக்கு நாட்டைப் பற்றி அறிவூட்டும் வகையில்,உள்நாட்டு வியாபாரிகள் இருவர் மோட்டார் சைக்கிளொன்றில் நாட்டைச் சுற்றி வருவதற்கான பயணத்தைத் தொடங்கியுள்ளனர்.

பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த வியாபாரிகளான ரன்ஜித்தியடோர்,கேகாலையைச் சேர்ந்த சரத் ரணசிங்க இருவருமே இவ்வாறு பயணம் மேற்கொண்டவர்களாகவர்.கொழும்பிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து தமது பயணத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்த இவர்கள் மொத்தமாக 2054 கிலோமீற்றரை 12 நாட்களில் பயணம் செய்யவுள்ளனர்.

இளைய தலை முறையினருக்கு நாடு குறித்து அறிவூட்டுகின்றமையையும் புராதன இடங்களை ஆய்வு செய்கின்றமையுமே தமது பயணத்தின் நோக்கமென இவர்கள் தெரிவித்தனர்.

# சென் பற்றிக்ஸ் வீதியோட்டம்





(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நேற்று வீதியோட்டம் நடைபெற்றது.

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக நேற்று 7.00 மணியளவில் வீதியோட்டம் நடைபெற்றது. 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குகொண்ட இந்த நிகழ்வை, பிரிகேடியர் டேவிட் மற்றும் கல்லூரியின் அதிபர் ஜெறோ. எம். செல்வநாயகம் ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

இதில் முதலாமிடம் ஏ. டிலுசன், இரண்டாமிடம் ரி. கனிஸ்ரன், மூன்றாமிடம் அஜித் டர்வின், நான்காமிடம் அன்ரனிதாஸ், ஐந்தாமிடம் ஏ. அஜினோத், ஆறாமிடம் மதுரன் எனப் பெற்றுக் கொண்டனர். முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் மேலும் 20 இடங்களுக்குள் வந்தவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும் என்றும், 22ஆம் திகதி நடைபெறும் மெய்வல்லுநர் போட்டியன்று இந்தப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் கல்லூரியின் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான ஆசிரியர் தெரிவித்தார். (எஸ்)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான இந்த வருட விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் கலந்து கொண்டு, பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (20)




# ஆறுதலடைந்த நியூசிலாந்து

(ஒக்லண்ட்)

பாகிஸ்தானுக்கு எதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று ஒக்லண்ட் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரைடர் 107, நதன் மக்குலம் 65 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் ஸ்றைரிஸ் ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அப்துல் ரசாக், ஹபீஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 312 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 44.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் உமர் அக்மல் 89, அப்ரிடி 44, சௌஹைல் தன்விர் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெனட் நான்கு, ப்ரைங்ளின் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ரைடர் தெரிவானார்.



ஏற்கனவே பாகிஸ்தான் அணி தொடரை வென்றபோதும் 3-2 என்ற கணக்கில் பாகிஸ்தான் முன்னிலை பெற்றது.

# அதிகார பூர்வ விளம்பரத்தை மட்டுமே வீரர்கள் பயன்படுத்த ஐ.சி.சி. அனுமதி

(டுபாய்)

உலகக் கிண்ணத் தொடரின் அதிகார பூர்வ விளம்பரத்தை மட்டுமே வீரர்கள் பயன்படுத்த வேண்டும். இதனை மீறுபவர்கள் தொடரில் இருந்து நீக்கப்படுவார்கள், என, ஐ.சி.சி., எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.சி.சி., யுடன் ஒப்பந்தம் செய்த நிறுவனங்களின் விளம்பர லோகோவுடன் மட்டும் தான் வீரர்கள், போட்டியில் பங்கேற்க வேண்டும். தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்த நிறுவன லோகோவை உலகக் கிண்ணப் போட்டிகளின் போது பயன்படுத்தக்கூடாது என இது தொடர்பாக கடந்த ஆண்டு அக்டோபரில், ஐ.சி.சி., சுற்றறிக்கை அனுப்பியிருந்தது.


இதை இந்திய வீரர் சச்சின், டோனி, நெஹ்ரா, யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் ஆகியோர் மீறியுள்ளனர். உலகக் கிண்ணத் தொடர் விளம்பர உரிமையை ரிலையன்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது. ஆனால் டோனி, ஏர்செல்லுடன் ஒப்பந்தம் செய்துள்ளார். மும்பை இந்தியன்ஸ் அணியின் ஸ்பொன்சர் ஜண்டு பாமுடன் சச்சின் ஒப்பந்தம் செயதுள்ளார். ஆனால் இந் நிறுவனம் உலகக் கிண்ணத் தொடரை ஸ்பொன்சர் செய்யவில்லை.

இது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபைச் சட்ட தலைமை ஆலோசகர் டேவிட் பெக்கர் கூறுகையில், உலகக் கிண்ணத் தொடரின் போது, வீரர்களின் பெயர், படங்கள் உட்பட எதையும், வர்த்தக நோக்கில் மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது. இது விதிகளை (விதி 1.5, பிரிவு 4இல் 2ஆம் பத்தி) மீறிய செயல். போட்டிகளில் பங்கேற்கும் போது மட்டுமே இதைப் பின்பற்ற வேண்டும். விதி மீறலில் ஈடுபட்டால், அவர்கள் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேற்றப்படுவர் என்றார்.




**உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் சாதித்தவர்களுக்கான சியட் விருது வழங்கும் நிகழ்வு மும்பையில் நடைபெற்றது. இதில் கடந்த 1983ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்று சாதித்த முன்னாள் இந்திய அணித் தலைவர் கபில்தேவிற்கு விருது வழங்கப்பட்டபோது...**

## நழுவியது வாய்ப்பு




(மும்பை)

நான்காவது ஐ.பி.எல் போட்டியில் விளையாடவேண்டுமென்றிருந்த கங்குலியின் ஆசை நிறைவேறாமல் போய்விட்டது.

ஐ.பி.எல். ஏலத்தின்போது 'ஏலம்' போகாத இந்திய கிரிக்கெட் வீரர்களான கங்குலி, வி.ஆர்.பி.சிங் உள்ளிட்ட வீரர்களை வாங்குமாறு ஐ.பி.எல். அணிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல் நிர்வாகக் குழுக் கூட்டத்தின் போது, ஏலம் இல்லாமல் நேரடியாக வீரர்களை வாங்குவதற்கு மற்ற அணி நிர்வாகிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் கொச்சி அணி கங்குலியை ஏலத்தில் எடுக்க முயன்றபோதும் மற்ற அணிகளின் எதிர்ப்பால் கடைசி வாய்ப்பும் அவருக்கு கைநழுவிப்போனது ஏமாற்றமே ஆகும்.

# காயத்திலிருந்து முழுமையாக குணமடைந்துள்ளார் சேவாக்

(புதுடில்லி)



எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்கான முழு உடற்தகுதியையும் பெற்றுவிட்டதாக இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக் தெரிவித்தார்.

தோள்பட்டை காயம் காரணமாக தென்னாபிரிக்கத் தொடரிலிருந்து வெளியேறிய நான் ஜேர்மன் சென்று இரண்டு வைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றேன்.

தற்போது சிகிச்சை முடிந்து நாடு திரும்பிய நான், பெங்களூரிலுள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் பயிற்சிக்காக இரண்டு நாள் செலவிட்டேன். அங்கு பந்து வீச்சு, களத்தடுப்பு போன்ற பயிற்சிகளை மேற்கொண்டேன். தற்போது முழு உடற்தகுதியைப் பெற்றுவிட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தன்னம்பிக்கையே காரணம்

(புதுடில்லி)



எனது பெற்றோர், நண்பர்களின் தன்னம்பிக்கையே நான் உலகக் கிண்ண அணியில் இடம்பிடிப்பதற்குக் காரணம் என அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கடந்த 10 ஆண்டுகளாக விளையாடி வருகிறேன். எனது பெற்றோரின் உதவிதான் இதற்குக் காரணம். கடந்த ஆண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் இருந்து நீக்கப்பட்டேன். அப்போது எனக்கு மிகுந்த சோதனை நிறைந்ததாக இருந்தது. இதன் காரணமாக சர்வதேச போட்டிகளில் இருந்து விலகிவிடலாம் என்று நான் நினைத்தேன். ஆனால் எனது பெற்றோர்தான் எனக்குச் சில விடயங்களைப் புரிய வைத்தனர். களத்தடுப்பின்போது ஒவ்வொரு முறையும் எனக்குக் காயம் ஏற்படும். அந்த நேரம் எனக்கு உண்மையில் மோசமாக இருக்கும். அப்போது எனது நண்பர்களும், பெற்றோரும் எனக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி கடினமாகப் பயிற்சி பெற வைத்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

# முழுத் திறமையையும் வெளிப்படுத்தி எதிரணிக்கு நெருக்கடி கொடுப்போம்!



ஒவ்வொரு போட்டியிலும் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி எதிரணிகளுக்கு நெருக்கடியைக் கொடுப்போம் என்ற நம்பிக்கை எமக்குள்ளதென அயர்லாந்து அணித் தலைவர் வில்லியம் போர்ட்பீல்ட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, உலகக் கிண்ணத் தொடருக்கான அயர்லாந்து அணியில் சிறந்த வீரர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தொடரில் சாதிக்கப்போதுமான பயிற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். நாங்கள் இடம்பெற்றிருக்கும் 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, இந்தியா உள்ளிட்ட பலம் வாய்ந்த அணிகள் உள்ளன.

இருப்பினும் இது குறித்துக் கவலை கொள்ளவில்லை. ஒவ்வொரு போட்டியிலும் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி எதிரணிகளுக்கு நெருக்கடி கொடுப்போம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

போட்டி என்று வந்துவிட்டால், அதன் தன்மை, கால நிலை போன்றவற்றையே கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதைவிடுத்து பெரிய அணி என்ற எண்ணம் கொள்ளப்படுமாயின் வெற்றிக்கோ அல்லது அணியின் வளர்ச்சிக்கோ உதவமாட்டாது என்று நாம் கருதுகின்றோம் என்றார்.

## இன்றைய ஆட்டங்கள்

(கொழும்பு)

இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஒரு நாள் போட்டி இன்று ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறுகின்றது.

தொடரைத் தீர்மானிக்கும் போட்டியாக இது அமைந்துள்ளமையால் இரு அணிகளும் பெரும் சவாலாக விளையாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(பேர்த்)

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் ஏழாவதும், இறுதியுமான போட்டி இன்று பேர்த் மைதானத்தில் நடைபெறுகின்றது.

தொடரை இழந்து பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள இங்கிலாந்து அணி, இப்போட்டியில் வெற்றி பெற்று ஆறுதல் அடையக் கடுமையாகப் போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இராணுவ நடவடிக்கை காரணமாக 20 ஆயிரம் மக்கள் இடப்பெயர்வு

(கராச்சி)

வடமேற்கு பாகிஸ்தான் பகுதியில் பழங்குடியின கிராமங்களில் பதுங்கியிருக்கும் தலிபான் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடவடிக்கை எடுக்கும்படி பாகிஸ்தானை அமெரிக்கா வலியுறுத்தியது. இதையடுத்து மொஹ்மாண்ட் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் கடந்த 27 ஆம் தேதி முதல் தீவிர தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியது.



தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் பகுதியில் விமானங்கள் மூலம் குண்டு வீசப்படுகிறது. ராணுவத்தினரும் பீரங்கி மூலம் தரைவழித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் மொஹ்மாண்ட் பகுதியில் இருந்து பழங்குடியின மக்கள் 22 ஆயிரம் பேர் வெளியேறி முகாம்களில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான உணவு மற்றும் மருத்துவ உதவிகளை ஐ.நா. வழங்கி வருகிறது. மொஹ்மாண்ட் பகுதியில் தாக்குதல் தொடர்ந்து நடைபெறும் என பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.





# உலகின் மிகப் பிரமாண்டமான எந்திரன்

(பீஜிங்)

உலகின் மிகப் பிரமாண்டமான இராட்சத ரோபோச் சிலை சீனாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இது 11 மீற்றர் உயரமும், 21 தொன் நிறையும் உடையது. பழைய வாகனங்களின் உதிரிப் பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது என்பது இந்த ரோபோச் சிலையின் இன்னொரு சிறப்பு அம்சமாகும்.



20 மோட்டார்க் கார்களில் இருந்து பெறப்பட்ட பாகங்கள் இதற்குப் பயன்பட்டுள்ளன. அதுவும் சொந்த நாட்டுத் தயாரிப்புக்களே பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. கடந்த 30 ஆம் திகதி இச்சிலை முழுமை பெற்றது.

சீனாவால் ஏற்கனவே அமைக்கப்பட்ட ரோபோச் சிலை ஒன்றே இதற்கு முன்னர் உலகின் மிகப் பிரமாண்டமான ரோபோச் சிலையாக இருந்தது. ஆனால் புதிய சிலையை விட ஒரு மீற்றர் உயரம் குறைவானது.

# இரட்டைக் கொலை வழக்கில் கைதான தூதரக அதிகாரியை விடுவியுங்கள்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வலியுறுத்து

(வொஷிங்டன்)

இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றி வருபவர் ரேமண்ட் டேவிஸ். கடந்த வாரம், 2 பாகிஸ்தானியரை சுடடுக்கொன்றதாக ரேமண்ட் டேவிஸ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், அவருக்கு தூதரக உறவின் அடிபபடையிலான பாதுகாப்பு வழங்கப்பட்டு இருப்பதால், அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு பாகிஸ்தான் அரசை அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது.

இதுதொடர்பான சர்வதேச விதிமுறைகளை பின்பற்றுமாறு அமெரிக்க வெளியுறவு செய்தித்தொடர்பாளர் பி.ஜே.கிரவுலி, பாகிஸ்தானைக் கேட்டுக்கொண்டார்.

# மியன்மாரின் புதிய ஜனாதிபதி தெரிவு

(நேபீட்டா)

மியன்மாரின் புதிய ஜனாதிபதியாக தெய்ன் செய்ன் (65) தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். அவருடன் மேலும் இருவர் துணை அதிபர்களாகத் தேர்வு செய் யப்பட்டுள்ளனர்.

மியன்மாரில், கடந்தாண்டு நவம்பரில் நடந்த தேர்தலில், ராணுவ ஆதரவுக் கட்சியான ஐக்கிய ஒற்றுமை மற்றும் மேம்பாட்டுக் கட்சி (யு.எஸ்.டி.பி.,) பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து இவ்வார தொடக்கத்தில் அந்நாட்டு நாடாளுமன்றம் 20 ஆண்டுகளுக்குப் பின் கூடியது. அதில் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளர்கள் மனுத் தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் நடந்த தேர்தலில், யு.எஸ்.டி.பி., கட்சியின் தலைவரும் தற்போது நாட்டின் பிரதமருமான தெய்ன் செய்ன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது கட்சியைச் சேர்ந்த டின் அவுங் மின்ட் ஊ மற்றும் சாய் மவுக் காம் இருவரும் துணை அதிபர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

ராணுவத்தின் தற்போதைய தலைவரான தானஷ் வே ஜனாதிபதித் தேர்தலில்



போட்டியிடவில்லை.

தொடர்ந்து அவர் ராணுவத் தலைவராக அல்லது அரசின் முக்கிய ஆலோசகராக இயங்கக் கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


புலமைபெறும் மாணவர்களின் ஒரே முரசு... "கல்விமுரசு"

2011 ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கத்தக்க மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள்

கல்வி முரசு



தேசிய ரீதியில் தொடர்ந்து முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் பயிற்சி பெற்ற முன்னோடி வினாத்தாள்களை வெளியிட்ட வெளியீட்டு நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் தேசிய ரீதியில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களை நெறிப்படுத்திய பாடசாலைகளில் இருந்து பெறப்படும் வினாத்தாள்களே எமது கல்வி முரசு ஊடாக வெளிவரும்.

வாரம் தோறும் எமது புலமை முரசு மாணவர்களின் கையில்......

திங்கள் — பகுதி -I (4 பக்கம்)

புதன் — பகுதி -II (4 பக்கம்)

வெள்ளி — பகுதி -I, II (விடைகளும், புள்ளியிடலும்)

எமது கல்வி முரசின் சேவைகள் அனைத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ....... இலவசம்

எட்டுத் திசையும் கொட்டட்டும் கல்வி முரசு

தரம்-05 மாணவர்களுக்கான முன்னோடி பயிற்சிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாளைப் பெறவிரும்பும் பெற்றோர்கள் அருகிலுள்ள "தினமுரசு" விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்து உங்கள் பிரதி கிடைப்பதை உறுதிப்படுத்தவும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலுடன் வெற்றிபெறும் மாணவர்களுக்கு மேலும் தங்கள் புள்ளியை உயர்த்த வீட்டில் இரவு வேளைகளில் பெற்றோரின் உதவியுடன் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான விசேட முன்னோடிப் பரீட்சை "கல்வி முரசு"

எம்மால் வாரம்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடாத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சி பெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சககர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள வழங்கிக் கௌரவிக்கப்படும்.




திரு.தி.சுப்பிரமணியம், ஆசிரியர், கல்விமுரசு

தினமுரசு காரியாலயம், 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



தபால் மூலம்

20 வருட அனுபவம்

ஆறுமாதகால டிப்ளோமா

Course Length - Six months

Jan 2011 to June 2011

தமிழ்மொழி மூலம்

| | |
|---|---|
| Dip.in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip.in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip.in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip.in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip.in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip.in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip.in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டிப்ளோமா |
| Dip.in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டிப்ளோமா |
| Dip.in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip.in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip.in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, ஹட்டன், மன்னார், திருகோணமலை, நுவரெலியா, கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி. தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றை கீழுள்ள கையடக்கத் தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம். - Mobile:0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

Country co-ordinator

Maruthur A.Hassen

(B.Sc.Psychology, M.Sc.Psychlolgy)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES


24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu -07

web:www.aiimas.com, wwwiimat.com, wwwaicomas.org

Tel: 067 222 2917, 0673671749, 0673679688, 0718034848

விண்ணப்ப முடிவுத் திகதி: 10.02.2011 (C/431)

# அகதிகள் முகாம்களை பூட்டுவதற்கு போராட்டம் நடத்தவுள்ளார் சீமான்



நாம் தமிழர் கட்சி சார்பில் பெப்ரவரி இறுதியில் பூந்த மல்லி மற்றும் செங்கல்பட்டில் உள்ள அகதிகள் முகாம்களை இழுத்துப் பூட்டும் போராட்டம் தனது தலைமையில் நடைபெறும் என, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டில் அகதிகள் முகாம்கள் என்ற பெயரில் தமிழக அரசு சட்ட விரோதமாக சித்திரவதைக் கூடங்களை நடத்துகின்றது.

ஆடு மாடுகளை அடைக்கும் கொட்டகையை விட மிகக் கேவலமாக அடிப்படை வசதிகள் ஏது மற்ற இடத்தில் அங்கு தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ளார்கள். செங்கல்பட்டு முகாமில் 23 தமிழர்களும் பூந்தமல்லியில் 4 தமிழர்களும் அடைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு இருப்பவர்கள் குற்ற வழக்கிலிருந்து விடுவிக்கப் பட்டும், உரிய முறையில் பிணை பெற்றும் இருக்கின்றனர். ஆனால் தமிழக அரசு அவர்களை சட்டத்திற்குப் புறம்பாக முகாம் என்ற பெயரில் அங்கு அடைத்து வைத்துள்ளது.

முகாம்களில் உள்ளவர்களை உறவினர்களோ, வழக்கறிஞரோ பார்க்க வேண்டும் என்றால் அரசின் அனுமதிபெற வேண்டும் அது என்றும் கிடைபபது இல்லை. அதிலும் பூந்தமல்லி முகாம் அமைந்துள்ள இடம் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களை அடைத்து வைப்பதற்கான உயர் பாதுகாப்பு சிறையாக இருந்த இடமாகும். அங்கு முகாமினைச் சுற்றிலும் மதில் மேல்மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது. உள்ளிருக்கும் ஒவ்வொரு அறையும் நாய்களின் சித்திர வதைக்கூடம் போல் இருக்கிறது.

முகாமிற்கு மேற்கூரை என்று எதுவும் இல்லை. கம்பிகள் தான் வேயப்பட்டுள்ளது. கடும் வெயிலோ பெருமழையோ, குளிரோ அப்படியே உள்ளே இருப்பவர்களைப் பாதிக்கிறது. முகாமினைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கில் காவலர்கள் மற்றும் உளவுத்துறையினர் நிறுத்தப்பட்டு அந்த இடம் பயங்கரமாகக் காட்சி அளிக்கிறது. மேலும் தமிழக அரசின் இந்தச் செயலானது மனித நேயத்திற்கு முற்றிலும் எதிரான செயல். சிறையைவிடக் கொடுமையாக இருக்கும் இடத்தை முகாம் என்று கூறி அடைத்து வைக்க அரசுக்கு அதிகாரம் இல்லை.

தற்பொழுது பூந்தமல்லியில் உள்ள தமிழர்கள் தங்களை விடுவிக்க வேண்டும் என்ற தங்கள் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி 5 ஆவது நாளாக உண்ணாவிரதம் இருக்கின்றனர். ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண் டிருக்கிறார். அங்குள்ளவர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்திப் போராட்டம் நடத்தும் பொழுதெல்லாம் கண்துடைப்பாக ஏதாவது செய்து பிரச்சினையை அரசும் அங்குள்ள அதிகாரிகளும் திசை திருப்புகின்றனர். அவர்களை விடுவிக்க மறுக்கின்றனர்.

இந்த அவலநிலை தொடராமல் இருக்க நாம் தமிழர் கட்சி சார்பில் பெப்ரவரி இறுதியில் பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டில் உள்ள அகதிகள் முகாம்களை இழுத்துப்பூட்டும் போராட்டம் எனது தலைமையில் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வாறு சீமான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கறுப்புப் பணம் வைத்துள்ளவர்களின் விபரத்தை வெளியிட்ட ஜேர்மன் வங்கி

(புதுடில்லி)

கறுப்புப் பணத்தை வைத்துள்ளவர்களின் பட்டியலை வெளியிட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கேட்டுக்கொண்டும், அதனை வெளியிட முடியாது என்றும் பட்டியலை வெளியிடுவதில் சட்டச்சிக்கல் உள்ளதாகவும் நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி கூறியிருந்தார்.

இந்நிலையில் ஜேர்மன் நாட்டில் உள்ள எல்.ஜி.டி. வங்கியில் கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களின் 18 பேரின் பெயர்கள் அடங்கிய ரகசிய பட்டியலை ஜேர்மன் அரசாங்கம் சமீபத்தில் வெளியிட்டது.

இந்த விவரம் சீலிடப்பட்ட உறையில் வைத்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜேர்மன் வங்கியில் கறுப்புப் பணம் போட்டிருக்கும் 18 பேரில் 15 பேரின் பெயர் பட்டியலை தெகல்கா என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதில் இடம் பெற்றுள்ள இந்தியர்கள் வருமாறு:-

1.மனோஜ் துபுலியா 2.ருபால் துபுலியா, 3.மோகன் துபுலியா, 4.ஹஸ்முக்காந்தி, 5.சிந்தன்காந்தி, 6.திலீப் மேத்தா, 7.அருண் மேத்தா, 8.அருண் கோசார், 9.குன்வாந்தி மேத்தா, 10.ரஜினிகாந்த் மேத்தா, 11.பிரபோத் மேத்தா, 12.அசோக் ஜெபுரியா, 13.ராஜ் பவுண்டேசன், 14.ஊர்வசி பவுண்டேசன், 15.அம்பூர்வனா அறக்கட்டளை ஆகியோரின் பெயர்கள் அதில் இடம் பெற்றுள்ளன.




### ஞாயிறு நற்சிந்தனை

## உப்பாக... ஒளியாக...



நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ள தாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும். வேறு ஒன்றுக்கும் உதவாது. (மத்தேயு 5:13-16)

நாம் எம் நிலையில் திருப்தியடைய வேண்டும். ஆகா நான் உவர்ப்பாக அல்லவா இருக்கிறேன். அடடா நான் வெப்பமாக அல்லவா இருக்கிறேன் என்று விரக்தியோ வேதனையோ அடையக்கூடாது. பாகற்காய் கசப்பாக இருப்பதில்தான் அதன் பெருமை. மாம்பழம் இனிப்பாக இருப்பதுதான் அதற்குச் சிறப்பு. இருப்பதில் திருப்தியடைந்து, நம்மிடம் இருக்கும் நம் தன்மையை எல்லோருக்கும் வழங்க வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் தேவைப்படும். ஆகவே சமூக முன்னேற்றத்திற்கு உங்களின் பங்களிப்பும் தேவைப்படுகிறது.

கிறிஸ்தவன், கத்தோலிக்கன் தனக்கென ஒரு தனித்தன்மை கொண்டு, உப்பாகவும் ஒளியாகவும் செயற்பட அழைக்கப்பட்டுள்ளான். தன் தனித்தன்மையைப் புகுத்தி எங்கும் எதிலும் தன் கத்தோலிக்கத்தின் மாண்பினை மிளிரச் செய்வதற்குப் பதிலாக, தன் இயல்பை இழந்துவிட்டால் அவன் இகழ்ச்சியடைவான். ஈடு கொடுக்க முடியாமல் இன்று பிரிவினைச் சபைகளின் மத்தியில் வாழும் கத்தோலிக்கர்களாகிய நாம் சாரமற்ற உப்பாகவும், மரக்காலுக்குள் வைக்கப்பட்ட விளக்காகவும் வாழாது - உணவிற்குச் சுவையூட்டும் உப்பாகவும், விளக்குத் தண்டின் மேல் வைக்கப்பட்ட விளக்காகவும் எல்லோருக்கும் ஒளிபரப்பி, இறைவார்த்தையில் புதுப்பிக்கப்பட்டு புதுவாழ்வு வாழ்வோம்.... முயற்சிப்போம்....

யா.அலெக்சாண்டர்
மறையாசிரியர்.

# ஸ்பெக்ட்ரம் ஊழலில் சிக்கியது கலைஞர் ரீ.வி?

(புதுடில்லி)

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகார வலையில், தமிழக முதல்வர் கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான கலைஞர் ரி.வியும் சிக்கியுள்ளதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மும்பையைச் சேர்ந்த டி.பி.ரியால்டி குழுமம் கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டின் உரிமம் பெற்ற நிறுவனங்களில் ஒன்று. இந்த நிறுவனத்திடம் இருந்து கலைஞர் டி.விக்கு ரூபா 214 கோடிக்குப் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டிருப்பது அமுலாக்கப் பிரிவு இயக்குநரின் விசாரணையின்போது தெரியவந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது கைது செய்யப்பட்டு சி.பி.ஐ காவலில் விசாரிக்கப்பட்டு வரும் ஆ.ராசா, தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தபோது சந்தை விலையைக் காட்டிலும் குறைந்த அளவுக்கு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்ததன் கைமாறாகவே டி.பி.ரியால்டி நிறுவனத்தால் இந்தத் தொகை பரிமாறப்பட்டதாக விசாரணை ஏஜென்சிகளை மேற்கோள்காட்டி டில்லி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த 2009 ஆம் ஆண்டில் டி.பி. குழுமத்தின் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் 45 சதவீத பங்குகள் எடிசலாட் நிறுவனத்துக்கு விற்கப்பட்டது. ஸ்வான் டெலிகொம் என அழைக்கப்பட்டு வந்த அந்த நிறுவனம் பின்னர் எடிசலாட் டி.பி. என மாறியதும் குறிப்பிடத்தக்கது. ஸ்பெக்டரம் ஊழல் விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் ஆ.ராசா கைதுக்குப் பிறகு, இந்த வலையில் கலைஞர் ரி.வி.யும் சிக்கியிருப்பதாக வெளியான தகவல், தமிழகம் மட்டுமன்றி டில்லியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.


நோர்த்சீ லிமிடெட்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள்

யாழ்.குருநகரில் இயங்கிவரும் வலைத் தொழிற்சாலையில் பணிபுரிவதற்காக பின்வரும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**1) உதவித் தொழிற்சாலை முகாமையாளர்** (Assistant Factory Manager) **வெற்றிடம் - 01 (ஆண்)**

☆ **கல்வித் தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் தேசிய தொழில்நுட்ப கற்கைநெறி (NDT) அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

☆ **வேலை அனுபவம்:** அரச/தனியார் உற்பத்தித் தொழிற்சாலையில் குறைந்தது 2 வருடங்கள் இயந்திரவியல், மின்னியல் மற்றும் இலத்திரனியல் துறையில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் நிர்வாக நடவடிக்கைகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணனி அறிவு விசேட தகுதியாகக்கொள்ளப்படும்.

☆ **வயதெல்லை:** விண்ணப்ப முடிவுத் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

☆ **சம்பள அளவுத்திட்டம் மற்றும் நியமனம்:** நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.

**2) களஞ்சிய காப்பாளர்** (Store Keeper Trainee) **பயிலுநர் வெற்றிடம் -01 (ஆண்)**

☆ **கல்வித் தகைமை:** கல்விப் பொதுத்தராதர உயர்தரம் வர்த்தகப் பிரிவில் (A/L) தேர்ச்சி மற்றும் AAT அல்லது NCAT சான்றிதழ்கள் பெற்றவராக இருத்தல் வேண்டும். அத்துடன், கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் துறையில் ஈடுபட்ட அனுபவம் விசேட தகுதியாகக் கொள்ளப்படும்.

☆ **வயதெல்லை:** விண்ணப்ப முடிவுத்திகதியன்று 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

☆ **சம்பளம் மற்றும் நியனம்:** நேரில் பேசித்தீர்த்துக்கொள்ளப்படும்.

இவ்வேலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரம் (CV) மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகளுடன் உறவினரல்லாத இருநற்சாட்சிப்படுத்துநர் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிட்டு 21.02.2011 அன்று அல்லது அதற்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

**பிரதிப் பொதுமுகாமையாளர்,**
**நோர்த் சீ லிமிட்டெட்,**
**வலைத் தொழிற்சாலை, குருநகர், யாழ்ப்பாணம்.**

(C/430)


# ஜெயலலிதாவுடன் சந்திரசேகரன் சந்திப்பு

# அ.தி.மு.கவிற்கு ஆதரவாக விஜய் பிரசாரம்?



(சென்னை)

ஜெயலலிதாவை இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரன் மீண்டும் சந்தித்துப் பேசினார். நடிகர் விஜய்யின் தந்தையும், சினிமா இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் மாலை போயஸ் கார்டனில் உள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வீட்டுக்குச் சென்றார். அங்கு ஜெயலலிதாவை அவர் சந்தித்துப் பேசினார். ஏற்கனவே ஒருமுறை சந்தித்தார். இந்தச் சந்திப்பு இரண்டாவது தடவை நடந்தது. 45 நிமிடம் அவர்கள் பேசினர்.

தேர்தலையொட்டி இச்சந்திப்பு நடந்துள்ளதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. விஜய் அரசியலில் ஈடுபட முடிவு செய்துள்ளார். ரசிகர்களை சமீபத்தில் சென்னைக்கு அழைத்து கருத்துக் கேட்டார். அப்போது அனைவரும் அரசியலில் ஈடுபடும்படி வற்புறுத்தினர்.

திருச்சியில் மாநாடு நடத்தி புதுக்கட்சி அறிவிப்பை வெளியிடலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் உடனடியாகக் கட்சி தொடங்க விஜய்க்கு ஆர்வம் இல்லை எனக் கூறப்படுகிறது. அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என பேச்சு அடிபடுகிறது. ஜெயலலிதா, எஸ்.ஏ.சந்திரசேகரன் சந்திப்பில் இதுபற்றி ஆலோசிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

"காவலன்" படம் வெளியாவதற்குப் பல்வேறு தடைகள் ஏற்பட்டது. இது விஜயை ஆத்திரமூட்டியுள்ளது. எனவே அவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது உறுதி எனக் கூறப்படுகிறது. வேலாயுதம், நண்பன் படங்களில் தற்போது நடித்து வருகிறார். தேர்தலுக்கு முன் இவ்விரு படங்களையும் முடித்துவிடத் திட்டமிட்டுள்ளார். ரசிகர் மன்றங்களை சில மாதங்களுக்கு முன் மக்கள் இயக்கமாக மாற்றினார். கிராமங்கள் தோறும அந்த இயக்கம் சார்பில் சமூக சேவை பணிகள் நடந்து வருகின்றன. ஜெயலலிதா, விஜய் படங்களுடன் ரசிகர்கள் முக்கிய பகுதிகளில் பதாகைகளைக் கட்டி வருகிறார்கள். சுவரொட்டிகளும் ஒட்டி வருகின்றனர். அவர்கள் இப்போது அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகத் தேர்தல் பணியில் இறங்கி விட்டனர். தனது அரசியல் முடிவை விஜய் ஒருசில தினங்களில் அறிவிப்பாக வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முல்லையில் தொடர் மழையால் 8102 குடும்பங்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக 8,102 குடும்பங்களைச் சேர்ந்த 26,370 பேர் பாதிப்படைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரிவில் 61 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரும் கரைதுறைப்பற்று பிரிவில் 247 குடும்பங்களைச் சேர்ந்த 821 பேரும் தமது வீடுகளிலிருந்து வெளியேறிப் பாடசாலைகளில் தங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். ஏனையோர் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு பொதுமக்களின் உதவியுடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, சமைத்த உணவுகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனிக்குளம்.முத்தையன் கட்டுக்குளம், உடையார்கட்டுக் குளம்,வான்முறிப்புக்குளம் போன்ற 18 நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்பி வழிவதால் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக விவசாயச் செய்கை பாதிப்படைந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சியில் புழுதியாற்றுக்குளம் உடைப்பெடுக்கும் அபாய முள்ளதுடன், இரணைமடுக் குளத்தின் 10 வான்கதவுகள் நேற்றுத் திறந்து விடப்பட்டுள்ள தாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# சிரேஷ்ட பிரஜைகளின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கவுள்ளது

(கொழும்பு)

இலங்கை சனத்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரசைகளின் எண்ணிக்கை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் இருமடங் காக அதிகரிக்குமென சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

இலங்கை சனத்தொகையில் பத்துசதவிகிதம் 60 வயதிற்கு மேற்பட்டவர்களெனவும் சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

சிரேஷ்ட பிரஜைகளின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் 17 ஆவது சட்டவிதிகளின்படி 1996 ஆம் ஆண்டு கொள்கையொன்றை உருவாக்கியுள்ளது. இதில் சிரேஷ்ட பிரஜைகளின் உடல் நிலையை மேம்படுத்துவதற்கான நிதியுதவி,ஓய்வூதியத் திட்டம், சமூக பாதுகாப்புத் திட்டம் என்பன உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நிறைவில் 3 இலட்சத்து 50 ஆயிரம் சிரேஷ்ட பிரஜைகள் ஓய்வூதியம் மற்றும் சமூகபாதுகாப்புத் திட்டம் என்பனவற்றில் இணைந்துள்ளனர். இவர்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபா வழங்கப்படுமெனவும் சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

# வவுனியா சிறையிலும் 21கைதிகள் விடுதலை

(வவுனியா)

63 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையிலிருந்து 21 கைதிகள் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மூன்று பெண்கள் அடங்குவதாகச் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சிறுகுற்றச்செயல்கள் காரணமாக நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டப்பணம் செலுத்தமுடியாது சிறைத்தண்டனை அனுபவித்து வந்தவர்களே இவ்வாறு பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# ஓய்வூதியம் வழங்கப்படாமல் படையினர் பணிநீக்கம் இல்லை

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஓய்வூதியம் வழங்காது படையினரை பணி நீக்கம் செய்யும் உத்தேசம் எதுவும் கிடையாது என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டு அடிப்படையற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 22 ஆண்டுகள் சேவையாற்றியவர்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் நன்மை அடைய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, படை அதிகாரிகள் மற்றும் படை வீரர்கள் உள்ளிட்ட 60,000 பேரைப் பணி நீக்கம் செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் உள்ளிட்ட நலத் திட்டங்களை கொடுக்காது படையினரைப் பணிநீக்கம் செய்ய முயற்சி என அவர் குற்றம் சுமத்தியுள்ளார் யுத்த காலத்தில் சேவையாற்றிய பலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கட்டுக்கரைக்குளத்தின் வான்கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழையினால் மன்னார் கட்டுக்கரைக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்பட்டதை அடுத்து குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் அடம்பன், வட்டக்கண்டல் உட்படசில தாழ்வான பிரதேசங்கள் வெள்ளப் பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ளதாகவும் குளத்திற்கு அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விதிகளில் ஒரு அடிக்கு மேல் நீர் மேவிப்பாய்வதாகவும் இதனால் வாகனப் போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# கடுமையான வெள்ளப் பெருக்கால் எட்டு இலட்சம் மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளிப்பெருக்கினால் 13 மாவட்டங்களில் எட்டு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

இந்த அனர்த்தத்தில் எட்டுப் பேர் உயிரிழந்ததுடன் இருவரைக் காணவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, மாத்தளை அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, வவுனியா, நுவரெலியா,கண்டி, அம்பாறை, புத்தளம், கேகாலை, மன்னார், மற்றும் மொனராகலை ஆகிய 13 மாவட்டங்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடுமையான வெள்ள அனர்த்தம் காரணமாக 37,673 குடும்பங்களைச் சேர்ந்த ஒருலட்சத்து 39 ஆயிரத்து 381 பேர் 430 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதிலும் பொலநறுவை மாவட்டத்திலேயே அதிகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இந்த மாவட்டத்தில் மட்டும் 2 இலட் சத்து 99 ஆயிரத்து 954 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்தது.

### பிரித்தானியாவிலும் கைவரிசை

பிரித்தானியாவில் ஆடை விற்பனை நிலையத்தில் ஆடைகள் திருடிய குற்றத்தின் பேரில் இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர். ஆயிரம் ஸ்ரேலிங் பவுன்ஸுக்கு அதிகம் பெறுமதியான ஆடைகளை இவர்கள் திருடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பிரித்தானியாவில் சூடன் பகுதியில் உள்ள கடையொன்றில் இவ்வாறு திருடியதாகத் தெரிவிக்கப்ப்டுகிறது.

# பால்நிறமாக மாறிய மிருசுவில் கிணறுகள்

(ஆனைக்கோட்டை)

மிருசுவில் பகுதியிலுள்ள சில கிணறுகளில் தண்ணீர் தற்போது திடீரெனப் பால் நிறமாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிணறுகளிலுள்ள தண்ணீரை வீட்டு உரிமையாளர்கள் பாவனைக்கு எடுத்துப் பார்த்தபோது மக்கியுடன் கலந்த வெள்ளை நிறக் கூழான பதார்த்தமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த மாற்றம் இயற்கையின் ஏதாவதொரு தாக்கத்திற்கு அறிகுறியாக இருக்கலாம் எனவும் முன்பு சுனாமி ஏற்படுவதற்கு முன்னரும் இப்படியான சம்பவம் இடம்பெற்றதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (104)

# அரசாங்க பணியாளருக்காக வைத்தியசாலையில் தனி விடுதி

(கொழும்பு )

சகல வைத்தியசாலைகளிலும் அரச ஊழியர்களுக்கு தனியான விடுதிகளை அமைப்பதற்கென வரவு செலவுத் திட்டத்தினுடாக 1000 மில்லியன் ரூபாவை அர்சாங்கம் ஒதுக்கியுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் அரச வைத்தியசாலைகளில் அரச ஊழியர்களுக்கான விடுதிகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நிர்மாணித்து வருகின்றது.

இந்த வகையில் அரச ஊழியர்களுக்கான முதலாவது விடுதி 25 லட்சம் ரூபா செலவில் மொனராகலை தம்பகல்ல கிராமிய வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு இந்த விடுதி இன்று ஊவா மாகாண முதலமைச்சர் சவிந்ர ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப் படவுள்ளது. தேசத்துக்கு மகுடம் கண்காட்சி இன்று முதல் 10ஆம்திகதி வரை புத்தலயில் நடைபெறுகின்றது. (மி)

# வன்னிப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள் ரத்து

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்கள் இந்த வருடத்திற்கான வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டிகளும், பெருவிளையாட்டுப் போட்டிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. .

அந்தப் பகுதியில் பெய்துவரும் அடைமழை காரணமாகவே இந்த விளையாட்டுப் போட்டிகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பகுதிப் பாடசாலைகளில் குறிப்பாக ஒட்டுசுட்டான் மற்றும் கோட்டக்கல்வி பகுதிக்குட்பட்ட துணுக்காய் வலயப் பாடசாலைகள் கீற்ஸ் போட்டிகளையும் பெருவிளையாட்டுக்களையும் நடத்தி முடித்திருந்த பொழுதும் இறுதி விளையாட்டுப் போட்டிகள் நடத்த இயலாதிருப்பதாகக் கூறப்படுகிறது. கரிப்பட்ட முறிப்புப் பாடசாலை மாணவியர் கொட்டும் மழையிலும் "நெற்போல்" போன்ற விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு இருந்தனர். (23)

# கைதிகள் இடமாற்றம்

அநுராதபுரச் சிறைச்சாலையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சுமார் 1,500 கைதிகள் இடமாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

இவர்கள் வாரியப்பொல, பல் லேகல, போகம்பர, புதிய மெகசின் மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## மீன்வியாபாரியின் பணம் திருட்டு

(ஆனைக்கோட்டை)

சாவகச்சேரி மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட நபரின் பணம் திருடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் நபர் மீனை விற்று பணத்தை வாங்கி தனது கைப்பையில் வைத்து விட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட சமயம் அந்த பணப்பை திருடப்பட்டுள்ளது.

திருடியவர் கைப்பையில் உள்ள பணத்தை எடுத்து விட்டு கைப்பையை தூக்கி வீசிவிட்டு சந்தையின் பின்புற வாசலினால் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப பட்டது. (104)

# விலை அதிகரிப்பில்லை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் விலையை அதிகரிக்கவில்லையென கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

டீசலுக்கான விலையை இலங்கையிலுள்ள இந்தியன் ஓயில் கம்பனியே (ஐ.ஓ.சி) அதிகரித்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன செயலாளர் தெரிவித்தார்.

# குச்சவெளி கடற்கரையில் 500 ஏக்கர் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கைகளில்

## சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை



(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச கடற்கரைப் பகுதிகளில் 500 ஏக்கர் நிலப் பரப்பு 20 வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளதாக சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 25 ஏக்கர் நிலப்பரப்பை கொள்வனவு செய்ய முடியும் எனவும் ஒரு ஏக்கர் நிலம் 20 மில்லியன் ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

99 வருட குத்தகை அடிப்படையில் இந்த காணிகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஒரே தடவையில் பணத்தை செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர், சுற்றுலா தொழிற்துறையை ஊக்குவிப்பதற்காக குச்சவெளி பிரதேச கடற்கரைப் பிரதேசத்தில் 48 ஏக்கர் நிலப்பரப்பு அந்த பிரதேசத்தை சேர்ந்த முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நிதியமைச்சின் புதிய திட்டம் காரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது அந்தக் காணிகளை வைத்துள்ளவர்கள் ஒரே தடவையில் பணத்தை செலுத்தி அவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது. எனினும் நிதியமைச்சின் இந்த தீர்மானம் அநீதியானது எனவும் தாம் காணிகளில் அபிவிருத்திப் பணிகளுக்காக பல லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளதாகவும் 25 ஏக்கர் காணிகளை ஒரே தடவையில் பணம் செலுத்தி வாங்கும் பொருளாதார வசதிகள் தம்மிடம் இல்லை எனவும் ஏற்கனவே காணிகளை பெற்றுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆசிரியர் கலாசாலையின் எதிர்காலம் ஆராயக் குழு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காகப் புதிய தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி விடயம் குறித்து ஆராய்வதற்கான விசேட கூட்டம் ஒன்று நேற்று மேற்படி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்றது.

மேற்படி பயிற்சிக் கலாசாலையின் எதிர்காலம் குறித்தும் அதன் அபிவிருத்தி குறித்தும் இக்குழு அதிக கவனம் எடுத்துச் செயற்படும். இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்துச் சாத்தியமான நடவடிக்கைகளையும் இக்குழு எதிர்காலத்தில் கவனிக்கும். வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இக்குழு செயற்படும் என்றும் தெரியவருகிறது.

## இலங்கையர்களுக்கு..

நாடுகளில் விசா வழங்கும் முன்னெடுப்புக்களின் போது இம்முறை பெரிதும் கையாளப்பட்டு வருகின்றது. இம்முறை மூலம் விசா மோசடிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றமை அதிகம் சாத்தியம் ஆகின்றது.

விசா வழங்கும் முன்னெடுப்புக்களில் கடந்த டிசம்பர் மாதம் முதல் இம்முறையை அவுஸ்ரேலியா பல நாடுகளில் கையாண்டு வருகின்றது.

இந்நிலையில் இலங்கையிலும் இத்தொழிநுட்பம், வரும் நாட்களில் கையாளப்படும் என்று அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சர் அறிவித்துள்ளார்.

# வெள்ளப்பாதிப்பு மேலும் அதிகரிக்கிறது

(வவுனியா)

மல்வத்து ஓயா திடீர்பெருக்கெடுத்து வவுனியா பாவக்குளத்தினை வந்தடைவதனால் பத்துக் கிராமங்கள் வரை பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாவற்குளத்தின் வான் கதவுகள் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளபோதிலும் நீர் மட்டம் உயர்வதன் காரணமாக பாவக்குளத்தின் ஆறு வான்கதவுகளையும் திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வவுனியா நீர்ப்பாசனத்திணைக்கள பிரதிப்பணிப்பாளர் சிவபாதசுந்தரன் தெரிவித்தார். மேலும் ஆறு வான்கதவுகளும் திறக்கப்பட்டால் 10 கிராமங்கள்வரை பாதிக்கப்படும் எனவும் அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்லுமாறும் அவர் தெரிவித்தார்.

மக்களை வெளியேறுவதற்கான அறிவுறுத்தலை ஒலிபெருக்கி மூலம் அறியப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (39,மி)

# சுற்றுலாவுக்குத்தடை; பெருவெள்ளத்தில் அனுராதபுரம்

(அனுராதபுரம்)

அநுராதபுர மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக சுற்றுல்லாப் பயணிகளின் வருகை தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அம் மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மாவட்டத்தின் அனைத்துக் குளங்களின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் அநுராதபுரம் - மாத்தளைச் சந்தி, அநுராதபுர சந்தைப் பகுதி, அநுராதபுர நகர், அனுதாபுர புனித பிரதேசம், ஹொரவப்பொத்தானை மற்றும் ஏ-9 வீதி என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அடை மழை காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் சுமார் 85,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அநுராதபுரம் மஹஜன விளையாட்டரங்கு, நச்சியதீவு முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

சுமார் 300 வீடுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் முழுமையாக மூழ்கிய பகுதிகளிலுள்ள மக்களை காப்பாற்றும் நடவடிக்கையில் இலங்கை விமானப் படையின் விமானங்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளிடமிருந்து...

புதுடில்லியின் இரகசிய அலுவலகம் ஒன்றில் சந்தித்து பல மணிநேரம்வரை உரையாடிக்கொண்டிருந்தனர். இராணுவ ரீதியிலான வியூகம் ஒன்றின்மூலமாக பொது மக்களை புலிகளிடமிருந்து பிரித்து எடுக்க முடியுமா என்பது குறித்து அப்போது ஆலோசிக்கப்பட்டது.


இதைவிட குறிப்பிட்ட மணித்தியால இடைவெளியில் இலங்கைப்படைகளின் தாக்குதல் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி கடல்வழியாக பொதுமக்களை மீட்டு எடுக்கமுடியுமா என்பது குறித்தும் அதிக கரிசனையுடன் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது புலிகள் இயக்கத்தினரால் பொதுமக்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்து இந்தியா அன்றைய நாட்களில் மிகுந்த கரிசனை எடுத்து இருந்தது என்று விக்கிலீக்ஸ் இணையத் தளத்தால் அண்மையில் வெளியிடப்பட்டிருக்கும் அமெரிக்காவின் 2009 ஆண்டு ஜனவரி மாதத்துக்கு உரிய இரகசிய இராஜதந்திர அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சராக அக்கால கட்டத்தில் இருந்த டேவிட் மில்பாண்டுடன் இந்தியா இது சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபட்டு இருந்தது என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. மில்பாண்ட் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவுக்குச் சென்று இருந்தார். அப்போது இந்தியாவின் வெளியுறவு அமைச் சராக இருந்தவர் பிரணாப் முகார்ஜி.

மில்பாண்டும் முகார்ஜியும் ஒருவரை ஒருவரை சந்தித்துப் பேசிய போது பொதுமக்களை புலிகள் மனிதக் கேடயங்களாக பயன்படுத்துகின்றமை குறித்து மந்திராலோசனை நடத்தி இருந்தனர் என்கிறது இந்த அறிக்கை.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் உள்ளார் என்றும் பொதுமக்களைப் புலிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் மில்பாண்டுக்கு முகார்ஜி தெரிவித்து இருக்கின்றார் என்று இந்த அறிக்கை சொல்கின்றது. யுத்த வலயத்தில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் இலங்கை அரசு அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்றும் முகார்ஜி சொல்லி இருக்கின்றார் என்றும் அறிக்கை குறிப்பிடுகின்றது.



# மனித உரிமைகளை...

"மனித உரிமைகளைப் பாதுகாத்தலும், 21ஆம் நூற்றாண்டில் ஐக்கிய நாடுகள் சபையும்" என்ற தலைப்பில் இவ்வாரம் உரையாற்றி இருந்தார். இவரின் உரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே பான் கீ மூனிடம் இக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் உரையாற்றிய போது, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலை நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை தனது உதவியாளர்களுடன் அங்கு விநியோகித்த Act Now அமைப்பின் இயக்குனர்களில் ஒருவரான ரிம் மார்டின் அதன் பின்னர் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போது பான் கீ மூனிடம் வன்னியில் இடம்பெற்ற போர் தொடர்பில் கேள்விகளை எழுப்பினார்.

வன்னிப் போரின் போது இலங்கை படைத்தரப்பால் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட போதிலும், ஐக்கிய நாடுகள் சபை அதனைத் தடுக்கத் தவறிவிட்டது என ரிம் மார்டின் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இவ் இனப்படுகொலையைப் புரிந்தவர்களை உங்களது பதவிக் காலத்தில் நீதியின் முன் நிறுத்துவேன் என்ற உறுதிமொழியைத் தர முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதேவேளை, இந்த இனப்படுகொலையைப் புரிந்தவர்கள் மீது சுயாதீனமான போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா எனவும், மொழி, கலாசாரம், சமயம் என்பவற்றால் மாறுபட்டுள்ள தமிழ் மக்களும் சூடான் போன்று பிரிந்து செல்லும் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபை வாக்கெடுப்பு நடத்துமா எனவும் ரிம் மார்டின் கேள்வி எழுப்பியிருந்தார்.

இக் கேள்விகளுக்குப் பதிலளித்த பான் கீ மூன், ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு தனது முதற்கட்டப் பணியைப் பூர்த்தி செய்யவில்லை எனவும், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் தாம் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு தடவைகள் நேரில் சென்றிருந்த போது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் மிகவும் கடும் தொனியில் தான் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாகவும், போரின் போதும், போர் முடிவுக்கு வந்த போதும் தானும் அங்குள்ள மக்கள் மீது கரிசனை கொண்டிருந்ததாகவும் பான் கீ மூன் கூறினார்.

அதேவேளை, லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில் Act Now மனிதநேய அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 2009ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கைப் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்திய போதிலும், பதவியில் இருந்த பான் கீ மூன் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கத் தவறியிருந்தமை குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை நடவடிக்கையை மேற்கொண்ட இலங்கை அரசாங்கத்தின் மீது சுயாதீனமான போர்க் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இவ்வமைப்பு தனது அறிக்கையில் வலியுறுத்தி உள்ளது.

Act Now அமைப்பின் இயக்குனர்களில் ஒருவரான ரிம் மார்டின் முள்ளிவாய்க்கால் படுகொலையை தடுத்து நிறுத்துமாறு கோரி பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு முன்பாக பல நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர் என்பதுடன், முன்னர் மனிதநேய அமைப்பொன்றிற்காக கிளிநொச்சியில் பணியாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# களுவாஞ்சிக்குடியில் ஆர்ப்பாட்டம்; நிவாரணம் கேட்டு மக்கள் திரண்டனர்



(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் முன்னால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட களுதாவளை - சாந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 100 இற்கு மேற்பட்ட பொது மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமக்கு இதுவரை எதுவித உதவிகளோ நிவாரணங்களோ வழங்கப்படவில்லை என்பதுவே இந்த மக்களின் கோரிக்கையாக இருந்தது. மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதை முன்கூட்டியே அறிந்த பிரதேச செயலக ஊழியர்கள், பிரதேச செயலக முன் கதவைப் பூட்டிவிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்ட போது பிரதேச செயலாளர் செயலகத்தினுள் இருந்ததால் பொலிஸாரின் உதவியுடன் மக்கள் பிரதிநிதிகள் மூவர் பிரதேச செயலாளரை சந்திக்க முயற்சித்தனர். எனினும் அது பலனளிக்கவில்லை.

இதேவேளை, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மக்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பிரச்சனைக்குத் தான் உடனடித் தீர்வு பெற்றுத்தருவதாக உறுதியளித்ததையடுத்து மக்கள் திரும்பிச் சென்றனர்.

# மனிதாபிமான கொடுப்பனவை மட்டுப்படுத்த நடவடிக்கை

## பிரிட்டிஷ் அரசு தீர்மானம்

(கொழும்பு)

அகதிகள், அரசியல் தஞ்ச கோரிக்கையாளர்கள் ஆகியோருக்கான மனிதாபிமான கொடுப்பனவை 60 சதவீதத்தால் வெட்ட பிரித்தானிய அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இத்தீர்மானம் நடைமுறைக்கு வருகின்றது. அகதிகளுக்கு நிதி வழங்கும் மனிதாபிமான அமைப்புக்கள், அகதிகள் நலன் பேணும் சபைகள் ஆகியனவும் இத்தீர்மானத்தை நடைமுறைக்கு கொண்டு வரும் முன்னெடுப்புக்களில் பங்குபற்றுகின்றன.

பிரித்தானிய பொருளாதாரத்தில் ஏற்பட்டு இருக்கும் வீழ்ச்சி மற்றும் தளம்பல் நிலை ஆகியனவே அரசின் இத்தீர்மானத்துக்குக் காரணம் என்று அந்நாட்டு நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இப்புதிய தீர்மானத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களாக பிரிட்டனிலுள்ள இலங்கைத் தமிழர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

## வனவிலங்கு சரணாலயம் ஜனாதிபதி திறந்து வைப்பு

(கொழும்பு)

யால தேசிய வன சரணாலயத்தின் புதிய நுழைவாயிலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்தார். சரணாலயத்தின் மூன்றாம் பகுதிக்குச் செல்வதற்கென அமைக்கப்பட்ட நுழைவாயிலை ஜனாதிபதி திறந்து வைத்துள்ளார்.

யால சரணாலயத்தை பார்வையிடுவதற்கென உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 50 லட்சம் பேர் கடந்த வருடம் வருகை தந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்மூலம் அரசாங்கம் 19 கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது.

## வேட்புமனு நிராகரிப்பு

# 10 மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் சார்பில் இதுவரை 10 மேன்முறையீட்டு மனுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வேட்பு மனுக்களை நிராகரித்தமை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியினுடைய சட்டவிரோத செயல் எனவும், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தை பணிக்கும்படியும் அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியினால் 4 மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எம்பிலிப்பிட்டிய, ஹோமாகம, வெலிக்கந்தை மற்றும் பந்தேகம ஆகிய பிரதேச சபைகளுக்கென தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அக்மீனம பிரதேச சபைக்கென தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேன்முறையீட்டு மனுதாக்கல் செய்துள்ளது.

மேலும் இரு உள்ளூராட்சி சபைகளுக்கென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஒரு உள்ளூராட்சி சபைக்கென லங்கா சம சமாஜக் கட்சியும் மேன்முறையீடுகளைச் செய்துள்ளன.

## பொதுமக்களின்...

செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை, தான் முற்றாக கண்டிப்பதாக வெலிமடை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இந்த கவலைக்குறிய விடயம் தொடர்பில் உடனடி நாடாளுமன்றத் தேர்வுக் குழுவொன்றை அமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

தமது கட்சி எதிர்வரும் 9ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ள பாரிய ஆர்ப்பாட்டத்தை இவ்வாறான தாக்குதல்கள் மூலம் எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிரபாகரனின்...

சக்தியை முற்றாக இழந்துள்ள அவர், யாரையும் அடையாளம் காண்பதிலும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளார். அதற்கு மேலாக தற்போது அவர் முற்றாக சுய நினைவை இழந்த நிலையில் காணப்படுகின்றார்.

வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவரும் இவரது உடல்நிலை தொடர்பாக மருத்துவர்கள் அடிக்கடி பரிசோதனைகளை நடாத்தி வருகின்றனர். அநேகமாக சுயநினைவு இழந்த நிலையில் இருக்கும் இவருக்கு உறவினர்கள் சிலர், கூட இருந்து பராமரிப்பு வேலைகளைச் செய்து வருகின்றனர்.


**இடமாற்றம்**

**50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப் பாணத்தில் இயங்கிவந்த**

**ஹரன் ஜுவலர்ஸ் ஸ்தாபனம்**

07.02.2011 முதல் 205, மின்சார நிலைய வீதியில் (பெரிய ஆஸ்பத்திரியின் பின்புறம்) இயங்கும் என்று அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

T.P: 2226083 (C/427) நிர்வாகம்


# இலங்கைத் தூதரகம் முன்பாக கனேடிய தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகத்தினரில் ஒரு சாரார் தலைநகர் ரொறன்ரோவில் அமைந்திருக்கும் இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

சுமார் 200 பேர் வரை இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று இருந்தனர்.

பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கனேடிய தமிழர்கள் தேசிய பேரவையின் மூத்த தலைவர்கள் இப்போராட்டத்தை முன்னின்று நடத்தினர்.

தமிழர்கள் இலங்கையில் இன்னமும் அடக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள், நசுக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள், இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பு உலக உணவுத் திட்டம் உதவி

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் 6 மாதகால அவசிய உணவுத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் வகையில் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் செயற்திட்டம் ஒன்றை உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மட்டக்களப்பு பொலன்னறுவை அநுராதபுரம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரிசி, பருப்பு, தேங்காய் மற்றும் சீனி என்பன இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது. இதற்காக 580 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்கள் வடக்கு மற்றும் கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## இடம்பெயரும்...

பட்டபின் இம் முகாம்கள் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக இலங்கைப் படைத்தரப்பின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபொஸ் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பில் வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் மீட்புப் பணிகளில் படைத்தரப்பைச் சேர்ந்த 200 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, மட்டக்களப்பு-மன்னம்பிட்டி வீதியில் 7 அடி உயரத்திற்கு வெள்ளம் பாய்வதால் ஆயிரக்கணக்கான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்ற வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## லண்டனில்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவிபத்து சம்பவம் பற்றி அறிந்ததும் 50 பேர் கொண்ட தீயணைக்கும் படையைச் சேர்ந்த குழுவினர் கடும் முயற்சியின் பின்னர் தீயை அணைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

இத் தீவிபத்து குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொளளப்பட்டு வருவதாக லண்டன் மாநகரப் பொலிசார் கூறியுள்ளனர்.

# மரண அறிவித்தல்

## சண்முகலிங்கம் அரவிந்தன்

அல்லாரை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், Edmonton London னை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் **அரவிந்தன்** (31.01.2011) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் சண்முகலிங்கம் மகேஸ்வரிபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகனும், சசிகலாவின் அன்புக் கணவரும், வாகீசன், யதுரிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராகுலன் (கனடா), அகிலன் (கனடா), சுதர்சன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தினி (கனடா), ஆனந்தி (கனடா), வாணி (அவுஸ்ரேலியா), சுலோசனா (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், லவக்குமாரின் (இலங்கை) சகலனும், நிரூசன், துவாரகன், பிரவின், பிரியங்கா, ரிஷிகேசன், சாருகேஸ், கபினேஸ் ஆகியோரின் சிறிய தந்தையும், கபிஷன், அனுஷன், சந்தியா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 - 11.30 வரை Hendon Crematorium Hoider Hill Road, Mill Hill London NW 71NB இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**திரு. திருமதி தர்மலிங்கம் (சுவிஸ்)**

**திரு. திருமதி உருத்திரானந்தன் (இலங்கை)**

**கச்சாய் வீதி, கொடிகாமம்.** (C/101) T.P: 0714483862


யாழ்.மாவட்ட மக்களுக்கு

ஷாலோம் SHALOM

SEC

உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.

குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...

SHALOM வழங்கும் நற்செய்தி...!

வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-

SHALOM 20/1, 2வது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C/418)

தீவகத்தில் SHALOM, சிற்பன வீதி, வங்களாவடி, வேலணை.

தொலைபேசி : 0217901798 - 0771044861


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.